வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
பக்கங்கள் : 16
விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

27.01.2021 புதன்கிழமை





06
வடக்கில் கொரோனா தடுப்பூசி பெப்ரவரி முதல்


07
ராஜபக்ஷ அரசு இப்போது விழி பிதுங்கி தவிக்கிறது


09
போராட்டங்களை ஒடுக்குகின்றதா ரஷ்யா


12
போராட்டம் வன்முறையாக வெடித்தது

# இலங்கைக்கு அழுத்தம் கொடுப்பார் ஜோ பைடன்

## தூதுவர் அலைனா உறுதிபட கூறுகிறார்

கொழும்பு, ஜனவரி 27

ஜோ பைடன் தலைமையிலான அமெரிக்காவின் புதிய நிர்வாகம் மனித உரிமை விவகாரங்களில் இலங்கைக்கு தொடர்ந்தும் அழுத்தங்களை கொடுக்கும்."

-இவ்வாறு தெரிவித்திருக்கிறார் இலங்கைக்கான தூதுவர் அலைனா ரெப்ளிட்ஸ். 02



## வடமாகாணத்தில் நேற்று 18 பேருக்கு கொரோனா!

யாழ்ப்பாணம், ஜன.27

வடக்கு மாகாணத்தில் மேலும் 18 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்களில் 3 பொலிஸார் உட்பட 15 பேர் மன்னார் சுகாதார மருத்துவ அதிகாரி 02

## கொரோனாவால் நேற்று மேலும் ஒருவர் மரணம்

### 748 பேருக்கு தொற்று 709 பேர் குணமடைவு

கொழும்பு,ஜன.27

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் ஒருவர் உயிரிழந்தார். இதன்மூலம் கொரோனா தொற்றால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 288 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் நேற்று இரவு 9 மணிவரையான 02

## மேலும் பத்து கிராம அலுவலர் பிரிவுகள் இன்று விடுவிப்பு!

கொழும்பு, ஜன. 27

நாட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மேலும் 10 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இன்று காலை 05.00 மணி முதல் தனிமைப்படுத்தல் நிலையில் இருந்து விடுவிக்கப்படுவதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி, களுத்துறை மாவட்டத்தில் 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் மற்றும் இரத்தினபுரி மாவட்டத்தில் ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவும் இவ்வாறு தனிமைப்படுத்தல் நிலையில் இருந்து விடுவிக்கப்படவுள்ளன.

## மூன்று லட்சம் பேருக்கு முதற்கட்டமாக தடுப்பூசி

கொழும்பு, ஜன.27

இலங்கையில் நாளை வியாழக்கிழமை முதல் கொரோனா தடுப்பூசி வழங்கும் பணி ஆரம்பித்ததன் பின்னர், முதல் கட்டத்தில் 3 இலட்சம் பேருக்கு தடுப்பூசி வழங்கக் 02

## யாழ்.போதனா வைத்தியசாலையின் விடுதியில் ஒருவருக்கு கொரோனா!

### மருத்துவர்கள், தாதியர்கள் தனிமைப்படுத்தல்

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மருத்துவ விடுதி 3இல் சிகிச்சை பெற்றவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அந்த விடுதியின் மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து வருகை தந்த நோயாளி 02

## வெளிநாட்டு இராஜதந்திரிகள் ஐ.நாவின் அறிக்கைக்கு ஆதரவு

கொழும்பு, ஜன.27

கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் சடலங்களைக் கட்டாயமாகத் தகனம் செய்வதற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை வரவேற்பதாகவும் இந்த விவகாரத்துக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று எதிர்பார்ப்பதாகவும் பன்னாட்டு இராஜதந்திரிகள் தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவேற்றியுள்ளனர்.

கட்டாயத்தகனம் தொடர்பான ஐ.நா. அறிக்கையை மேற்கோள்காட்டி இலங்கைக்கான பிரிட் 02

## பாதுகாப்பான தடுப்பூசியே இந்தியாவிடமிருந்து வரும்

### இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி விளக்கம்



கொழும்பு,ஜன.27

உலக சுகாதார ஸ்தாபனத்தின் மூன்றாம் கட்ட பரிசோதனையிலும் வெற்றி கண்டு அனுமதியைப் பெறும் கட்டத்திலுள்ள மிகவும் பாதுகாப்பான தடுப்பூசியையே நாம் இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்கின்றோம்.

முதல் கட்டமாக சுகாதாரத்துறையுடன் நேரடியாக தொடர்புடையவர்களுக்கும் அடுத்தடுத்த கட்டத்தில் வெகுவிரைவில் நாட்டு மக்களுக்கும் 02

## மைத்திரி மூலம் கூட்டமைப்பு என்னை சிறையில் அடைத்தது

### பிள்ளையான் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஜன. 27

எந்தவிதமான சாட்சிகளோ, ஆதாரங்களோ இல்லாமல் திட்டமிட்ட வகையிலே மைத்திரிபால சிறிசேனவை ஆட்சிக்கு கொண்டு வந்தோம் என்ற நன்றிக் கடனுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்னைச் சிறையில் அடைத்தார்கள் என மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுத் 02

## அரச வைத்தியசாலைகள் ஊடாகவே கொரோனா தடுப்பூசி வழங்கப்படும்

கொழும்பு, ஜன.27

கொரோனா தடுப்பூசி அரச வைத்தியசாலைகளின் ஊடாகவே வழங்கப்படும். நாட்டில் சுமார் 1060 அரச வைத்தியசாலைகள் காணப்படுகின்ற போதிலும் அவற்றில் தேர்ந்தெடுக்கப்பட்டவற்றினூடாக தடுப்பூசி வழங்கும் செயல்திட்டம் முன்னெடுக்கப்படும் என்று கொரோனா நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் அமல் 02

## பாதுகாப்பான...

இதனை வழங்க எதிர்பார்த்துள்ளோம் என்று கொரோனா நோய்க் கட்டுப் பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச் சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட் டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த வாரத்தில் இந்தியாவிடமிருந்து தடுப்பூசிகள் 6 இலட்சம் வழங்கப்படும். தடுப்பூசிகள் கிடைத்த அடுத்த நாள் முதல் அதனை வழங்கும் செயற்பாடுகள் ஆரம் பிக்கப்படும். தடுப்பூசி வழங்கும்போது முகங்கொடுக்க நேரிடும் பிரச்சினைகள் தொடர்பில் இனங்காண்பதற்காக ஒத் திகைகள் நடத்தப்பட்டன. தடுப்பூசி வழங்குவதன் மூலம் சுகாதார கட்டமைப் புக்கு காணப்படும் சுமை குறைவடையும்.

இதன் மூலம் மக்களின் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்து தீவிரமாக வைரஸ் பரவுவதிலிருந்து தவிர்த்துக் கொள்ள முடியும். முதல்கட்ட மாக முன்னிலையில் சுகாதார சேவையில் ஈடுபடுபவர்களுக்கும் அடுத்தடுத்து முப்படையினர், பொலிஸார் உள்ளிட் டோருக்கும் வழங்கப்படும். 3 இலட்சம் பேருக்கு முதலாவதாக தடுப்பூசி ஏற்றப் பட்டு 3 வாரங்களின் பின்னர் இரண் டாவது முறையும் ஏற்றப்படும்.

உலக சுகாதார ஸ்தாபனத்திடமிருந்து 20 வீதமான தடுப்பூசிகள் இலவசமாக கிடைக்கவுள்ளன. அதன் பின்னர் தேவை யான தடுப்பூசிகளை பணம் கொடுத்து கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். 2021 ஆம் ஆண்டில் கொரோனா தடுப்பில் தடுப்பூசி வழங் கும் செயல்பாடு முக்கிய இடத்தை வகிக் கும். மக்கள் அனைவரையும் இதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கு மாறு கோருகின்றோம்.

உலக சுகாதார ஸ்தாபனத்தினால் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட மிகவும் சிறந்த தடுப்பூசிகளில் ஒன்றையே நாம் இந்தியாவிடமிருந்து பெற்றுக் கொள்கின்றோம். நாட்டுக்கு கொண்டு வரப்படும் எந்தவொரு மருந்தோ அல்லது தடுப்பூசியோ தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையினால் அனுமதியைப் பெறவேண்டும்.

பைசர் பயோஎன்ரெக் என்ற தடுப்பூசிக்கு அவசர பயன்பாட்டுக்கான அனுமதியை உலக சுகாதார ஸ்தாபனம் வழங்கியுள்ளதோடு, ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ராசெனெகா மற்றும் மொடர்னா ஆகிய தடுப்பூசிகள் உலக சுகாதார ஸ்தா பனத்தின் மூன்றாம் கட்ட பரிசோதனை யிலும் வெற்றி கண்டு அனுமதியைப் பெறும் கட்டத்திலுள்ளன. அரசாங்கம் என்ற ரீதியில் பாதுகாப்பான தடுப்பூ சியை நாட்டு மக்களுக்கு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். - என்றார். (அ-எ)

## மைத்திரி மூலம்...

தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரு மான சி.சந்திரகாந்தன் தெரிவித்தார்.

வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கும்புறுமூலை கிராம மக் கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர் பில் கேட்டறியும் மக்கள் சந்திப்பு கும் புறுமூலை பிள்ளையார் ஆலய முன்ற லில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்சொன்னவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கை யில்-

கிழக்கு மாகாணத்தில் கிழக்கு மாகாண மக்கள் தங்களது தலைவிதியை மாற்றிக் கொள்வதற்கு தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அபிவிருத்தி, அதிகார விடயங்கள் எவை வந்தாலும் உங்கள் தலைவிதியை தீர்மானிக்கின்ற அளவுக்கு நீங்கள் மாற்றமடையவேண்டும். இத னைக் கொழும்பிலோ அல்லது யாழ்ப் பாணத்தில் இருந்தோ வருகின்றவர்கள் தீர்மானிப்பதன் காரணமாக பல முறைப் பாடுகள் அழிவுகளை கடந்த காலத்தில் கண்டோம்.

இந்த கசப்பான அனுபவங்களை வைத்துதான் எமது கட்சி உருவானது. கிழக்கு மாகாணத்தில் உதித்துள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியை அழித்து விடவேண்டும் என்பதற்காகத் தான் என்னைக் கூட சிறையில் அடைத் தார்கள். அதை நீதிமன்றம் உறுதிப்படுத் தியுள்ளது. எந்தவிதமான சாட்சிகளோ, ஆதாரங்களோ இல்லாமல் திட்டமிட்ட வகையிலே மைத்திரிபால சிறிசேனவை ஆட்சிக்கு கொண்டு வந்தோம் என்ற நன் றிக் கடனுக்காக தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பினர் என்னைச் சிறையில் அடைத் தார்கள்.

## மூன்று லட்சம்...

கூடியதாக இருக்கும் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் உலக சுகாதார அமைப்பு வழங்கவுள்ள தடுப்பூசி கிடைத்த பின்னர் நாட்டின் சனத்தொகையில் 20 வீதமானோ ருக்கு மிகவிரைவில் தடுப்பூசி வழங்க முடியும் என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

ஒரு மணித்தியாலத்தில் 15 தொடக் கம் 20 பேருக்கு தடுப்பூசியை வழங்க முடியும் என்றும், கடந்த சில தினங் களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஒத்திகையின் மூலம் இது கண்டறி யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித் தார். (அ-எ)

## யாழ். போதனா...

ஒருவருக்கே கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது என்று வைத்திய சாலைப் பணிப்பாளர், மருத்துவர் த.சத் தியமூர்த்தி தெரிவித்தார்.

அத்துடன், 9ஆவது நோயாளர் விடு தியிலும் நோயாளி ஒருவரிடம் மாதிரி பெறப்பட்டு பரிசோதனைக்கு உள்படுத் தப்பட்டது. அவருடைய மாதிரியில் முடிவெடுக்க முடியாத நிலை ஏற்பட் டுள்ளதால் இன்று மீளவும் மாதிரி பெறப் பட்டு பரிசோதனை முன்னெடுக்கப்பட வுள்ளது.

நோயாளர் விடுதிகளின் மருத்து வர்கள், தாதிய உத்தியோகத்தர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகாமை யில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## அரச வைத்திய...

ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட் டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த ஒரு வருடமாக கொரோனா தொற்றுக்கான தீர்வொன்று கிடைக் குமா? இல்லையா? என்ற மனக்கவலை யுடனேயே நாம் அனைவரும் இருந் தோம்.

தற்போது அதற்கான பதில் கிடைத் துள்ளது. கொரோனா தடுப்பு நடவடிக் கைகளில் வைத்தியர்கள், தாதிகள் உள் ளிட்டோர் அர்ப்பணிப்புடன் சேவை யாற்றி வருகின்றனர். எனவேதான் அவர் களுக்கு முதல்கட்டமாக தடுப்பூசியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளை உரிய இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கும் மக்களுக்கு வழங்குவதற்கும் சகல தயார்ப்படுத்தல் களும் செய்யப்பட்டுள்ளன. தடுப்பூசிகள் வழங்கப்பட்டாலும் அடிப்படை சுகா தார பாதுகாப்பு விதிமுறைகளைப் பேணுவதும் அத்தியாவசியமானதாகும்.

நாம் வைத்தியசாலைகள், தனிமைப் படுத்தல் நிலையங்கள் உள்ளிட்டவற்றுக் குச் செல்லும் போது தொற்று ஏற்படக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமுள்ளன. இது மிகவும் ஆபத்தான தொற்றாகும். எனவே மக்கள் அனைவரும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்- என்றார். (அ-எ)

# இலங்கைக்கு எதிராக வலுவான புதிய பிரேரணை வரவேண்டும்!

## சர்வதேச மன்னிப்பு சபை வலியுறுத்து

புதுடில்லி, ஜன. 27

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத்தொடரின் போது இலங்கையின் மனித உரிமை நிலவரங்களைத் தொடர்ந்து கண்காணித்தல், மனித உரிமைகள் மீறல் குறித்த ஆதாரங்களைத் திரட்டுதல், ஆராய்தல் ஆகியவற்றுக்கு ஏதுவான மிகவும் வலுவான புதியதொரு பிரேரணையைக் கொண்டுவர வேண்டும் என்று ஜேர்மனி உள்ளிட்ட உறுப்புநாடுகளிடம் சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

அதன் ருவிட்டர் பீஎப்பதிவிலேயே இவ்வாறு கூறப்பட்டுள்ளது. மேலும், "சர்வதேச சட்டங்களுக்கு முரணாக இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல் களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய வர்களை சட்டத்தின்முன் நிறுத்த ஏற்ற வாறான, தேசிய ரீதியில் நம்பகத்தன்மை வாய்ந்த பொறுப்புக்கூறல் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்த இலங்கை அரசு தயாராக இல்லை. ஒருமித்த தீர் மானத்துக்கு வரமுடியும் என்பதைப் பாதிக்கப்பட்டவர்கள் பலமுறை கேட்டு விட்டார்கள்.

எதிர்காலத்தில் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதையும் தண்டனைகளி லிருந்து தப்பிப்பதைத் தடுப்பதையும் நோக்காகக்கொண்ட சர்வதேச பொறி முறைக்கு ஆதரவு வழங்குவதாகவும் இலங்கை அறிவிக்கவில்லை. இத்தகைய சூழ்நிலையில் 'ஒருமித்த தீர்மானம்' ஒன்றால் எவ்வித நன்மைகளும் ஏற்படப் போவதில்லை.

ஆகவே, இலங்கைக்கு எதிராக வலு வான புதியதொரு பிரேரணையைக் கொண்டு வரவேண்டும் என்று வலி யுறுத்துகின்றோம்" - என்றுள்ளது. (ஐ)

## வெளிநாட்டு...

இதுடன் தூதுவர் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில், "ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்களி டமிருந்து மிகத்தெளிவான செய்தி யொன்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் உடல்களை சர்வதேச சுகாதார வழிகாட்டல்களின் அடிப்படை யிலும், தத்தமது மத நம்பிக்கைகளின் பிரகாரமும் அடக்கம் செய்வதற்கு அவர் களது குடும்பத்தினர் அனுமதிக்கப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை "இலங்கையில் முன்னெ டுக்கப்பட்டுவரும் கட்டாயத்தகனம் தொடர்பில் மிகவும் வலுவானதொரு அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்டுள்ளது. இந்த விடயத் துக்கு உடனடியாகத் தீர்வுகாணப்பட வேண்டும்" என்று இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினன் அவரது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித் துள்ளார்.

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் மிகமுக்கிய அமர்வு விரை வில் ஜெனிவாவில் நடைபெறவுள்ளது. இதன்போது ஒருமித்த தீர்வொன்றை அடையமுடியும் என்று நம்புகின்றோம்" என்று ஜேர்மன் தூதுவர் ஹோல்கர் சீபர்ட் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

மேலும் இது தொடர்பில் தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான செயற்திட் டம், கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழப்போரின் உடல்களைக் கட்டா யத்தகனம் செய்வதற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்டிருக் கும் அறிக்கை மிகவும் முக்கியமானது என்று சுட்டிக்காட்டியிருக்கிறது.

"தேசியவாதம், பாகுபாடு, ஆக்கிர மிப்புக்கொள்கை ஆகியவற்றின் அடிப் படையில் பொதுச்சுகாதாரத் தீர்மானங் கள் மேற்கொள்ளப்படுவதை ஐ.நா. அறிக்கை கண்டித்துள்ளது" என்றும் அந்தப் பதிவில் சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. (அ-எ)

## வடமாகாணத்தில்...

பிரிவில் கண்டறியப்பட்டுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 319 பேரின் மாதி ரிகளும், யாழ். போதனா வைத்தியசாலை யில் 360 பேரின் மதிரிகளும் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே 18 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னாரில் கொரோனா வைரஸ் தொற் றால் பாதிக்கப்பட்டவர்களுடன் நேரடித் தொடர்புடையவர்கள் சுயதனிமைப்படுத் தப்பட்டுள்ளனர். அவர்களில் 12 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

மன்னாரில் பணியாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூவருக்கும் தொற்று உள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில் வவுனியா தொற்றாளர்களுடன் தொடர்புடைய ஒருவருக்கும் தொற்றுள் ளமை நேற்றுக் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்தவர்களிடம் எழுதுமட்டு வாழில் வைத்து மாதிரிகள் பெறப்பட் டிருந்தன. இவ்வாறு மாதிரிகள் பெறப் பட்டவர்களில் இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர்களில் ஒருவர் சுதுமலையைச் சேர்ந்தவர். மற்றவர் கண்டியைச் சேர்ந்த வர் -என்றார். (அ-எ)

## கொரோனாவால்...

காலப்பகுதிக்குள் மட்டும் 748 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள் ளது.

இதேவேளை நேற்று நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து மேலும் 709 பேர் பூரண குணமடைந்து வீடு களுக்குச் சென்றுள்ளனர்.

இதன்படி இதுவரையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி பூரண குணமடைந்த வர்களின் எண்ணிக்கை 51 ஆயிரத்து 46 ஆக அதிகரித்துள்ளது. (அ-எ)

## இலங்கைக்கு...

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ் வாறு கூறினார்.

அமெரிக்கா மீண்டும் மனித உரிமை கள் பேரவையில் இணைந்து கொள்ளுமா என்பது குறித்து தற்போதைக்கு தெரி விக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட் டார்.

எனினும் ஏனைய நாடுகள் மூலமாக இலங்கையில் உண்மையான அமைதி காணப்படுவதை உறுதி செய்வதற்காக அமெரிக்கா பாடுபடும் என அவர் கூறி னார்.

முன்னைய அரசாங்கத்தின்போதும் தற்போதைய அரசாங்கத்தின் ஆட்சியி லும் மனித உரிமை விடயங்களில் முன் னேற்றம் மிகவும் மந்த கதியிலேயே காணப்படுகின்றது எனவும் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் மனித உரிமைக்கு ஆதர வளிப்பதை இலங்கையுடன் வலிந்து மோதலில் ஈடுபடுவதாக கருதக்கூடாது எனவும் தூதுவர் தெரிவித்தார். (அ)

ஈழநாடு
Eelanadu
26.01.2021 புதன்கிழமை
சார்வரி, தை 14

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்**
**உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

e-mail: editor@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# ஒருபோதுமே திருந்தாதவர்கள்

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ள அறிக்கை கசிந்திருக்கின்றது. அறிக்கை மிகவும் காட்டமானது. முதல்முதலாக இலங்கை விவகாரத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தவேண்டும் என்னும் பரிந்துரையொன்றையும் ஆணையாளர் முன்வைத்திருக்கின்றார். ஆணையாளரின் அறிக்கை என்பது வெறும் பரிந்துரைகள் மட்டும்தான். அதற்குமேல், அதற்கு எவ்வித பெறுமதியுமில்லை. மனித உரிமைகள் பேரவையின் அங்கத்துவ நாடுகளே இறுதி முடிவை எடுக்கும். ஒரு வேளை, மனித உரிமைகள் பேரவையில் இந்த விடயத்தை தொடர்ந்தும் விவாதிப்பதில் பயனில்லையென்று கருதப்படுமாக இருந்தால், அதன் பின்னர் விடயம் ஐ.நா. பொதுச் சபைக்கு பாரப்படுத்தப்படும். ஆனால், அங்கு சவால்கள் அதிகம். ஏனெனில், பொதுச் சபையில் பெரும்பான்மையான நாடுகளின் ஆதரவை பெறவேண்டும். ஒருவேளை பொதுச் சபையில் தோல்வியடைந்தால், இலங்கை விவகாரம் நீர்த்துப்போய்விடும். மனித உரிமைகள் பேரவையிலிருந்து இலங்கையை வெளியில் எடுத்தால் அதனை தங்களால் சமாளிக்க முடியுமென்றே கொழும்பும் கருதுகின்றது.

நிலைமைகள் இவ்வாறிருக்க, தமிழ்த் தேசியத்திற்கு தலைமை தாங்குவதாக கூறிக்கொள்ளும் கட்சிகள் மீண்டும் தங்களின் குழாயடி சண்டையை ஆரம்பித்துவிட்டன. சில தினங்களுக்கு முன்னர் விக்னேஸ்வரன் அணியின் தலைவர்களில் ஒருவரான சுரேஷ் பிறேமச்சந்திரன், ஜெனிவா விவகாரத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இனப்படுகொலையை வலியுறுத்தவில்லை என்று விமர்சித்திருந்தார். தற்போது அதற்கு பதிலளிக்கும் வகையில், பிரேமச்சந்திரன் ஓர் அரசியல் விபச்சாரி முன்னர் சம்பந்தனோடு இணைந்து விடுதலைப் போராட்டத்தை காட்டிக்கொடுத்துவிட்டு, இப்போது நல்லவருக்கு நடிக்கின்றார் என்று, பொன்னம்பலம் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், இதே சுரேஷ் பிறேமச்சந்திரனும் கஜேந்திரகுமாரும் இணைந்துதான் தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகித்தனர். சம்பந்தன் விடுதலைப் போராட்டத்தை காட்டிக்கொடுத்ததாக கூறும் பொன்னம்பலம், சம்பந்தனோடு இணைந்துதான் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு ஓர் ஆவணத்தை அனுப்பியிருக்கின்றார். ஆனால், இப்போது பொதுவெளியில் மீண்டும் அநாகரிகமாக மோதிக்கொள்கின்றனர்.

ஒருபுறம் அனைவருமாக இணைந்து ஜெனிவா அரங்கை கையாளப் போவதாக கூறிக்கொண்டு, பிறிதொரு புறம் பொதுவெளிகளில் மற்றவர்களை அரசியல் விபச்சாரிகள், காட்டிக்கொடுத்தவர்கள் என, தங்களுக்குள் மோதிக்கொள்வதால் தமிழ் மக்களுக்கு கிடைக்கப்போகும் நன்மை என்ன? தமிழ்த் தேசிய அரசியலில் தங்களை மாற்று அணியாக காண்பித்துக்கொண்டவர்கள் தங்களுக்குள் அநாகரிகமாக மோதிக் கொள்வது ஒரு விடயத்தை தெளிவுபடுத்துகின்றது. அதாவது, மாற்றுத் தலைமையென்பது முற்றிலும் தோல்வியடைந்துவிட்டது. மாற்றுத் தரப்பினருக்குள் இடம்பெறும் சண்டை, இவர்களைவிட கூட்டமைப்பே மேலானதென்று சிந்திக்கக்கூடிய நிலைமையை மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கின்றது.

இலங்கையின் மீதான சர்வதேச நெருக்கடிகள் ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்று. இது தங்களால்தான் நடந்ததென்று அரசியல்வாதிகள் கூறிக்கொள்ளலாம் ஆனால், உண்மை வேறு. எதிர்பார்த்தது போன்று ஆணையாளரின் அறிக்கையில் காட்டம் தெரிகின்றது. ஆனால், தமிழ் அரசியல்வாதிகளின் சண்டை தமிழர்கள்மீது பரிவுகொண்டிருக்கும் சர்வதேச சமூகத்திற்கு எரிச்சலூட்டும் வகையிலேயே இருக்கின்றது. இதனை திட்டமிட்டுத்தான் சிலர் செய்கின்றனரா? ஆனால், ஒன்று மட்டும் உண்மை. அதாவது, நாங்கள் ஒருபோதுமே திருந்தமாட்டோம் எங்களை எவராலும் திருத்த முடியாது என்பதை எங்களின் அரசியல்வாதிகள் உரத்துக் கூறிக்கொண்டிருக்கின்றனர். அரசியலில் சிலரை திருத்த முடியாது. ஆனால், மக்கள் திருந்தாலாம்தானே! மக்கள் திருந்தினால், சிலர் அரசியல் அரங்கிலேயே இருக்க முடியாதல்லவா? மாற்றம் மக்களிடமிருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். மக்கள் தங்களை திருத்திக்கொண்டால், பின்னர் எல்லோருமே ஒன்றில், திருத்தப்படுவர் அல்லது துரத்தப்படுவர்.

# தோற்கடிக்கவும், வெற்றிகொள்ளவும் ஜெனிவா போர்க் களமல்ல!

- அலசுவது **இராஜதந்திரி** -

*இலங்கையில் இராணுவ சேவைகளிலிருந்தோரே நிர்வாகம்மற்றும்வெளிநாட்டு சேவைகளின் உயர்பொறுப்புகளில் நியமிக்கப்பட்டுள்ளதன் வெளிப்பாடு, தற்போது ஜெனிவா மனித உரிமை பேரவையின் 46ஆவது கூட்டத் தொடரிலும் பிரதிபலிக்க இருப்ப தையே மக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர மற்றும் வெளிநாட்டமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே ஆகியோர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் வெளிப்படுத்துவனவாக இருக்கின்றன.*

*நிர்வாக சேவை, வெளிநாட்டுச்சேவை என்பவற்றில் அனுபவசாலிகளான அதிகாரிகள் ஓரங்கட்டப்பட்டு, ஆயுதப்படைகளின் உயரதிகாரிகளாக பணியாற்றியவர்களே தற்போது நிர்வாக, வெளிநாட்டு சேவைகளில் முக்கிய பொறுப்புகளில் நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து தென்னிலங்கையிலும் நிர்வாகசேவை மற்றும் வெளிநாட்டுச்சேவை என்பவற்றில் சேவையாற்றுகின்ற சிரேஷ்ட அதிகாரிகள் மத்தியில் பலத்த அதிருப்தி நிலவுவதையும் காணமுடிகின்றது.*

*இலங்கையின் நிர்வாகசேவை, வெளிநாட்டுச்சேவை என்பவை தரம் வாய்ந்தவை எனவும் குறிப்பிடப்படுவதுண்டு. நிர்வாகசேவை மற்றும் வெளிநாட்டு இராஜதந்திர சேவை என்பவற்றுக்கு போட்டிப் பரீட்சைகள் மூலமாக தரம் வாய்ந்த அதிகாரிகளே தெரிவுசெய்யப்படுவதுண்டு. ஆனால், இன்றைய அரசாங்கத்தில் என்றும் இல்லாதவாறு, இராணுவ சேவைகளில் இருப்போர் எவ்வித வெளிநாட்டு சேவை மற்றும் நிர்வாகசேவை அனுபவங்களுமின்றி அத்துறைகள் சார்ந்த முக்கிய பொறுப்புக்களில் நியமிக்கப்பட்டுள்ளனர். இதன்காரணமாகவே பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர, ஜெனிவா மனித உரிமைபேரவை கூட்டத்தொடரை ஒரு யுத்த நடவடிக்கைபோல கணித்து, அங்கே இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகள் தோற்கடிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.*

## உறுப்பு நாடுகளின் நலன்

*சர்வதேச சமூகத்தின் முக்கிய நிறுவனங்கள் பொறுப்புணர்வோடு தமது உறுப்பு நாடுகளின் நலன் கருதியே செயற்படுவது வழக்கமாகும். இதன் காரணமாகவே மனித உரிமைப்பேரவை உட்பட பல்வேறு நிறுவனங்களையும் உள்ளடக்கியதாக ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு நாட் டுக்கும் எதிராகச் செயல்படுவதோ அல்லது உள் நாட்டு பிரச்னைகளை பூதாகரமாக்கிவிடுவதோ ஐக்கிய நாடுகள் ஸ்தாபன நிறுவனங்களின் நோக்க மல்ல.*

*ஆயினும், அநீதிகள் இடம்பெற்று உறுப்பு நாடுகளின் மனித உரிமைகள் கேள்விக்குறியாகும்போதும், உரிய வழிகாட்டல்களை தகுந்த பிரேரணைகள், தீர்மானங்கள் மூலமாக ஐ. நா மனித உரிமைபேரவை போன்ற நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன.*

*ஐக்கிய நாடுகள் ஸ்தாபன மனித உரிமை பேரவை இன, மத வேறுபாடுகள் மற்றும் செல்வந்த- வறிய நாடுகள் என்ற இடைவெளிகளுக்கு அப்பால், தனது சகல உறுப்பு நாடுகளினதும் மக்கள் நலன் கருதியதாகவே செயற்படுகின்றது.*

## அட்மிரலின் அறியாமை

*எனவே, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையில் இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகள் தோற்கடிக்கப்படும் என்று கூறியிருப்பது ஏதோ ஓர் இராணுவ நடவடிக்கையை கையாளுவதுபோன்ற தோரணையில் இருப்பதையே அவதானிக்கமுடிகிறது. எனவே, இவரைப் போன்றவர்கள் இலங்கையின் முக்கியமான சர்வதேச ரீதியிலான பிரச்னைகளை கையாள அனுமதிக்கப்படும் பட்சத்தில் இலங்கையின் கௌரவம் மிகவும் பாதிக்கப்படக்கூடியதாகவே இருக்கும்.*

*இலங்கையில் ஆயிரக்கணக்கானவர்கள் காணாமல்போயிருப்பதும், இதில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது படையினரிடம் உறவுகள், நண்பர்கள் எதிரே சரணடைந்த பலர் காணாமல் போயிருப்பதும், அரசியல் கைதிகள் என்ற ரீதியில் நீண்ட காலமாக நீதிவிசாரணைகளின்றி பலர் சிறையிலடைக்கப்பட்டிருப்பதும் மூடிமறைக்கமுடியாத உண்மைகளாகவே இருக்கின்றன.*

*இதுதவிர, யுத்தத்திற்கு பின்னர் சகல இனமக்களும் இன நல்லுறவைப் பேணி வாழ்வதற்கு ஏற்ற விதத்திலேயே புதிய அரசியலமைப்பை கொண்டு வரவேண்டியதன் அவசியத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை வலியுறுத்தியுமிருக்கின்றது. இருந்தபோதிலும், இதனை ஒரு பக்கச் சார்பானதாக நோக்கி, யுத்த சன்னதத்தோடு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் கருத்து வெளியிட்டிருப்பது கவலைக்குரியதாகவே இருக்கின்றது.*

*சர்வதேச சமூகம், ஒரு நாடுகுறித்த முடிவுகளை எடுக்கும்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் பாதிப்பு ஏற்படாதவிதத்தில் நடுநிலை நின்றே தனது தீமானங்களை முன்வைக்கும்.*

*இந்த வகையில், ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப்பேரவையின் கூட்டத் தொடரில் உண்மைகளை ஏற்றுக்கொண்டு, முழு இலங்கையினதும் நன்மையைக் கருத்திற்கொண்டதாக, பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களின் நல்லுறவை வளர்த்தெடுக்கும் வகையில் நடந்து கொள்வதே இலங்கை பிரதிநிதிகளின் புத்திசாலித்தனமான நடவடிக்கையாக இருக்கமுடியும்.*

*இதைவிடுத்து, சர்வதேச அரங்குகளையும் போர்க்களமாக நினைத்து, இராஜதந்திரமற்ற ரீதியில் இலங்கை நடந்துகொள்ளுமேயானால் சர்வதேச ரீதியாக பல்வேறு விதத்திலும் பாதிப்புக்களை எதிர்கொள்ளவேண்டிய இக்கட்டான நிலைக்கே முகங்கொடுக்க நேரிடும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# 100 நீதிமன்ற கட்டடங்களை 3 ஆண்டுகளில் நிறுவ திட்டம்

## பொறியியல் பணியகத்திடம் பணிகளை ஒப்படைக்க அமைச்சரவை ஒப்புதல்

கொழும்பு,ஜன.27

**3 ஆண்டுகளில் 100 புதிய நீதிமன்ற கட்டடத் தொகுதிகளை அமைப்பதற்கான ஆலோசனையை பொறியல் பணிகள் தொடர்பான மத்திய பணியகத்திடம் ஆலோசனை பெற்றுக்கொள்ள அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.**

இது தொடர்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடந்த அமைச்சரவையில் நீதி அமைச்சர் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் நீதியை நிலை நாட்ட இயங்கிவரும் நீதிமன்றங் களில் அதிகளவு வழக்குகள் தேங்கிக்கிடக்கின்றன.

அதற்குத் தீர்வாக நீதிமன்ற நீதிவான்களின் எண்ணிக்கையை நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

அதேபோல் நீதிமன்றங்களின் ஏனைய வசதிகளை நிறைவு செய்ய வேண்டியதுடன், 3 வருடங் களில் புதிய 100 நீதிமன்றக் கட்டடங்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன்கீழ் பலமாடி நீதிமன்றக் கட்டடத் தொகுதிகளை அமைப்பதற்கும் தற்போது காணப்படும் கட்ட டங்களைச் சீரமைப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நீதிமன்றக் கட்டடங்களை அமைப்பதற்கு அனுபவம் கொண்ட பொறியியல் பணிகள் தொடர்பான மத்திய பணியகத்திடமிருந்து தேவையான ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

## ஐ.தே.க. வழங்கிய பதவியை நிராகரித்த நவீன் திஸநாயக்க

கொழும்பு, ஜன. 27

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியை பொருத்தமான நபரொருவருக்கு வழங்குமாறுகோரி கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க வுக்கு நவீன் திஸநாயக்க நேற்று கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளர் பதவியில் நவீன் திஸநாயக்கவை நீடிக்க வைப்பதற்கு கட்சியின் மத்திய செயற்குழு அண்மையில் முடிவெடுத்திருந்தது. இந்நிலையிலேயே நவீன் இவ்வாறானதொரு கடிதத்தை அனுப்பியுள்ளார். கட்சி உறுப்புரிமை மற்றும் செயற்குழு உறுப்பினர் என்ற அந்தஸ்து தனக்கு போதும் என வும், பிற பதவிகள் அவசியமில்லை எனவும் நவீன் திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.




**மேடம்**
மற்றவர்களின் பாராட்டுகளைப் பெற்று மகிழ்ச்சி காணும் நாள். குடும்பத்திற்கு தேவையானவற்றை வாங்கும் சேர்க்கும் எண்ணம் உருவாகும். வரவு திருப்தி தரும்.

**இடபம்**
நண்பர்களால் நல்ல காரியம் நடைபெறும். மாமன், மைத்துனர்கள் உங்கள் பணிகளுக்கு உறுதுணையாக இருப்பர். ஆபரணங்கள் வாங்கும் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்**
நலனில் அக்கறை செலுத்தும் நாள். பிள்ளைகள் வழியில் நல்ல செய்திகள் வரும். நீண்ட நாளைய எண்ணம் நிறைவேறும். பெருமையடைவீர்கள்.

**கடகம்**
விரயங்கள் குறைய விழிப்புணர்ச்சி தேவைப்படும் நாள். புதிய ஒப்பந்தங்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை.

**சிம்மம்**
மனக்குழப்பம் அகலும். மாற்றுக்கருத்துடையோர் மனம்மாறுவர். பொருளாதார முன்னேற்றம். தொழில் ரீதியாக எடுத்த முயற்சிக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு.

**கன்னி**
உத்தியோக முயற்சி கைகூடும். ஊர்மாற்றச் சிந்தனை மேலோங்கும். மற்றவர்களின் அறிவுரைகளை ஏற்பதால் மகிழ்ச்சி. சகோதரவழிச் சச்சரவுகள் அகலும்.

**துலாம்**
வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். விவாகப்பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரும். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிக்கான அறிகுறி பிரியமானவர்களின் சந்திப்பு.

**விருட்சிகம்**
நிதானத்துடன் செயல்பட வேண்டும். நிகழ்காலத் தேவைகள் பூர்த்தியாகும். வரவை விடச் செலவு. உத்தியோகத்தில் அனுசரித்து செல்வது நல்லது.

**தனுசு**
விலகிச் சென்றவர்கள் மீண்டும் வந்து சேரும் நாள். பயணத்தால் பலன் கிட்டும். அன்பு நண்பர்களின் ஆதரவு கிட்டும். உத்தியோகத்தில் மாற்றங்கள் வரலாம்.

**மகரம்**
லாபம் இருமடங்காகும் நாள். ஆரோக்கியத் தொல்லை அகலும். அடுத்தவர்களுக்காக எடுத்த முயற்சியில் எதிர் பார்த்த ஆதாயம். கோபத்தைத் தவிர்ப்பது நல்லது.

**கும்பம்**
காரிய வெற்றி. புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். தொழிலில் பழைய பங்குதாரர்கள் மீண்டும் வந்திணையும் வாய்ப்பு.

**மீனம்**
யோகமான நாள். பாராட்டும், புகழும் கூடும். வரவு திருப்தி. தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும். ஒப்படைத்த பொறுப்பு நடைபெற்று மகிழ்ச்சியடைவீர்கள்.

# கோட்டாபய அரசு மீது வெறுப்பில் உள்ளேன்!

## அமைச்சர் டலஸ் அதிரடி கருத்து



கொழும்பு, ஜன. 27

சாதாரண மக்கள் மாத்திரமல்ல அமைச்சரான நானும் இந்த அரசு மீது கடும் வெறுப்பில் இருந்து வருகின்றேன் என மின்வலு அமைச் சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மாத்தறை, தேவேந்திரமுனையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் மகளிர் அணியின் அதிகார சபைக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

மிகப் பெரிய பல பிரச்னைகளை மக்கள் எதிர்நோக்கி வருகின்றனர். இதனால், அரசை விமர்சிக்கும் உரிமை அவர்களுக்கு இருக்கின்றது.

அரசை விமர்சிக்க வேண்டாம் எனக்கூறஎவருக்கும்உரிமையில்லை. மக்கள்தான் அரசைத் தெரிவு செய்கின்றனர். எனவே, அரசை விமர்சிக்க அவர்களுக்குப் பூரண சுதந்திரம் உண்டு-என்றார்.

# ஓ.எல். மாணவர், ஆசிரியர்கள் அருகில் உள்ள பாடசாலைகளில் இணையலாம்

கொழும்பு, ஜன. 27

பாடசாலைகள் தொடங்கப்படுவதன் மூலம் மாணவர்களின் மாவட்டங்களுக்கும் மாகாணங்களுக்கும் இடையிலான போக்குவரத்தை குறைக்க சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அனைத்து க.பொ.த. சாதாரணதர மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை கல்வி அமைச்சு கேட்டுள்ளது.

அதன்படி,பாடசாலை கொழும்பு மாவட்டத்தில் அமைந்திருந்தாலும், அருகிலுள்ள பாடசாலைக்குச் சென்று தற்காலிகக் கல்வியைப் பெறுவதற்கான வசதிகள் உள்ளன என்று கல்வி அமைச்சு சுட்டிக்காட்டுகிறது.

“தற்போதைய சூழ்நிலையை எதிர்கொண்டு, ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் இந்த வாய்ப்பு வழங்கப்படும்.

அதன்படி, மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் அருகிலுள்ள பாடசாலையில் இணைந்து கற்றல் மற்றும் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்று கல்வி அமைச்சின் செயலாளர், கபில பெரேரா தெரிவித்தார்.

# ஜனாதிபதியின் தீர்மானத்தை அமைச்சர்கள் ஏற்கவேண்டும்

## அமைச்சர் ஜோன்ஸ்டன் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 27

ஜனாதிபதியும், அரசும் ஒரு தீர்மானத்தை எடுத்தால், அமைச்சர்கள் அனைவரும் அந்தத் தீர்மானத்துடன் ஒன்றாக இணைந்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாது வேறு நோக்கங்களின் பின்னால் செல்ல முயற்சிப்பது பெரிய அழிவை ஏற்படுத்தக்கூடும் என எச்சரிக்கை விடுத்துள்ளார் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ.

அவர்மேலும்தெரிவித்ததாவது: -

ஜனாதிபதி, தீர்மானம் ஒன்றை எடுத்தால், அரசு ஒரு தீர்மானத்தை எடுத்தால், அமைச்சர்கள் அனைவரும் அந்தத் தீர்மானத்துடன் இணைந்திருக்க வேண்டும். அதனை விடுத்து, பறக்கும் பட்டங்களை உருவாக்கி, அதன் ஊடாக சென்றால் மிகப் பெரிய அழிவு ஏற்படும்.

எதிர்க்கட்சிகள் பறக்கும் பட்டங்களை அனுப்புகின்றன. அமைச்சர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

இந்த நாட்டு மக்கள் மாபெரும் வெற்றியுடன் ஜனாதிபதியை அரியணையில் ஏற்றினார்கள்.

நாட்டுக்கேற்ற நல்ல பிரதமரை நியமித்து - வலுவான அரசை அமைத்து சரியான முடிவுகளை ஜனாதிபதி எடுக்கும்போது, அந்தத் தீர்மானங்களுடன் அமைச்சர்கள் இணைந்திருக்க வேண்டும்.

பௌத்த பிக்குகள் தலைமையேற்று ஜனாதிபதிக்கும் அரசுக்கும் ஆலோசனைகளை வழங்குவதைத் தவறாக நான் காணவில்லை.

எனினும், சில நேரங்களில் பௌத்த பிக்குகள் சிலரை எதிரணியினர் தூண்டி விடுகின்றனர். இந்த விடயத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும்” - என்றார்.

# வீரவசனம் பேசிய அரசு தற்போது ஐ.நாவுக்கு அடிபணிந்துவிட்டது!

## கிண்டலடிக்கிறார் ரஞ்சித் மத்தும பண்டார



கொழும்பு, ஜன. 27

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்திலிருந்து விலகிவிட்டோம் எனவும், இலங்கையை ஐ.நா. மிரட்ட முடியாது எனவும் வாய்ச்சவடால் விட்ட கோட்டாபய அரசு, இன்று போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கையில் ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை மீண்டும் பரிசீலிப்பதற்கான மூவரடங்கிய ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைத்துள்ளது. ஆரம்பத்தில் வீரவசனம் பேசிய அரசு, தற்போது ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைத்தமை ஐ.நாவுக்கு அடிபணிந்தமைக்கு ஒப்பானதாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் புதிய ஆணைக்குழு இம்முறை ஐ.நாவின் பிடியிலிருந்து தப்பும் வகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அமைக்கப்பட்டதா என்ற சந்தேகமும் எழுந்துள்ளது.

கடந்தகால ஆணைக்குழுக்களின் அறிக்கைகளை ஆராய்கின்றோம் என்ற பெயரில் காலத்தைக் கடத்தும் நோக்கிலும் புதிய ஆணைக்குழுவை இந்த அரசு நிறுவியிருக்கக் கூடும்.

எனினும், நாட்டையும் மக்களையும் ஏமாற்றுவது போல் ஐ.நாவையோ அல்லது சர்வதேச சமூகத்தையே இந்த அரசு ஏமாற்ற முடியாது.

ஐ.நாவின் உறுப்புரிமை நாடான இலங்கை, மனித உரிமைகள் சபையின் கொள்கைகளை மீறிச் செயற்பட முடியாது-என்றார்.

# பிரதேச செயலருக்கு திடீரென இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 27

காணி சுவீகரிப்பை தற்காலிகமாக இடைநிறுத்திய வேலணைப் பிரதேச செயலருக்கு, திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மண்கும்பான், மண்டைதீவு உள்ளிட்ட பல இடங்களில், கடற்படையினரின் தேவைகளுக்காக பொதுமக்களின் காணிகளை சுவீகரிக்கும் நோக்கில், நில அளவைத் திணைக்களத்தால் அளவீட்டுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அண்மையில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், அங்கு விரைந்த அரசியல்வாதிகளும், பொது மக்களும், காணி உரிமையாளர்களும் இணைந்து, அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

மண்டைதீவில் நடைபெற்ற மக்கள் போராட்டத்தின் போதும், வேலணைப் பிரதேச செயலகத்தின் முன்பாக நடைபெற்ற போராட்டத்தின் போதும், போராட்டக்காரர்களை நேரடியாகச் சந்தித்த பிரதேச செயலாளர் சோதிநாதன், மக்களினது இத்தகைய எதிர்ப்புகள் காரணமாக, காணி அளவீட்டுப் பணிகளைத் தற்காலிகமாக இடைநிறுத்துவதாக அறிவித்திருந்தார்.

அத்துடன், இது தொடர்பில் காணி அமைச்சின் செயலாளருக்கு தெரியப்படுத்தப்படும் என்றும், இதற்கான பதில் வரும் வரையும் காணி அளவிடுதல் பணிகள் முன்னெடுக்கப்படமாட்டாது என்றும் அவர் அறிவித்திருந்தார்.

இதேவேளை, குறித்த பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற நிலையில், காணிகளை சுவீகரிக்கும் நோக்கில், அளவீடுகள் செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டமும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில், கடற்படையினருக்கு காணி சுவீகரிப்பதற்காக நிலஅளவைத் திணைக்களத்தால் காணி அளவீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு, குறித்த பிரதேச செயலாளர் தடையாக இருப்பதாகவும் அவரே தடுத்து நிறுத்தியதாகவும், அரச உயர் மட்டத்துக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனாலேயே, குறித்த பிரதேச செயலாளருக்கு, திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. அதேநேரம், வேலணை பிரதேச செயலாளர் பதவிக்கு, செட்டிகுளம் பிரதேச செயலாளர் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அடிப்படை சம்பளம் ஆயிரம் ரூபா: திட்டத்தை முன்னெடுக்க அனுமதி

கொழும்பு, ஜன. 27

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை ஆயிரம் ரூபாவாக உயர்த்த தேவையான நடவடிக்கைகளை சம்பளக் கட்டுப்பாட்டுச் சபை மூலம் எடுக்க அமைச்சரவையால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

2021 வரவு-செலவுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள இந்த முன்மொழிவு தொடர்பாக தொழில் உறவுகள் அமைச்சர் நேற்றுமுன்தினம் அமைச்சரவையில் முன்வைத்த திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இலங்கை இந்தியாவுக்கு வழங்கவுள்ள 500,000 டோஸ் அஸ்ட்ராஜெனெகா கோவ்ஷீல்ட் தடுப்பூசி நாளை நாட்டிற்கு வரும் என்று இந்தியத் தூதுவர் தகவல் அளித்துள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அமைச்சரவையில் தெரிவித்துள்ளார்.



# ரஞ்சன் ராமநாயக்க சிறைக்கு மாற்றம்

கொழும்பு, ஜன. 26

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, அங்குணுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளார்

தனிமைப்படுத்தல் காலத்தை நிறைவு செய்த நிலையில், நீர்கொழும்பு பல்லன்சேன மையத்தில் இருந்து அவர் அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு 4 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

கொரோனா பரவல் காரணமாக தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அவர் பல்லன்சேன மையத்தில் தனிமைப் படுத்தப்பட்டிருந்தார்.

# ஜெனிவாவில் நெருக்கடியை சமாளிக்கவே ஆணைக்குழு

## மங்களவும் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜன. 27

அரசின் கேவலமான நடவடிக்கைகளால் இலங்கை இம்முறை ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரில் பாரிய நெருக்குவாரங்களைச் சந்திக்கவுள்ளது. அதைச் சமாளிக்கவே கோட்டாபய அரசு புதிய ஆணைக்குழுவை நியமித்துள்ளது. இது சர்வதேசத்தை ஏமாற்றும் நடவடிக்கை என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்தகாலப் போர்க்குற்ற மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை மீள ஆராய்கின்றோம் என்ற பேரில் சர்வதேசத்தை ஏமாற்று வகையில் புதிய ஆணைக்குழுவை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நியமித்துள்ளார். அரசின் இந்த ஏமாற்று நாடகத்தைப் பார்க்கச் சர்வதேசம் ஒருபோதும் தயாராக இல்லை.

ஐ.நாவின் பிடியிலிருந்து இலங்கையை அன்று நல்லாட்சி அரசு காப்பாற்றியது. ஆனால், இலங்கையை இன்று ஐ.நாவின் வலையில் சிக்கவைத்துள்ளது கோட்டாபய அரசு-என்றார்.

# மற்றொரு வகை வைரஸ் இலங்கையில் கண்டறிவு

கொழும்பு, ஜன. 27

கொரோனா வைரஸின் மற்றொரு புதிய வகை இலங்கையில்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வல்லுநர் குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இந்த வீரியம் கூடிய புதிய வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.இந்த மாறுபாடு தற்போது டென்மார்க், சுவிட்சர்லாந்து உள்ளிட்ட பல நாடுகளில் வேகமாக பரவி வருவதாக ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வலைப்பாடு பகுதியில் குடும்பம் மீது வாள்வெட்டு!

## விசாரணை திருப்தியில்லை என பாதிக்கப்பட்டோர் கடும் விசனம்

கிளிநொச்சி,ஜன. 27

கிளிநொச்சி வலைப்பாட்டுப் பகுதியில் உள்ள குடும்பம் மீது வாள்வெட்டுத் தாக்கதல் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் தொடர்பான சாட்சியங்களை மறைக்க பொலிஸார் முயற்சிப்பதாக பாதிக்கப்பட்டோர் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி ஜெயபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வலைப்பாட்டுப் பதியில் உள்ள குடும்பம் மீது கடந்த 18ஆம் திகதி நள்ளிரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் நீதியான விசாரணை மேற்கொள்ளவில்லை எனவும், சாட்சியங்களை மறைக்க முற்படுவதாகவும் பாதிக்கப்பட்ட குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

அதே பகுதியை சேர்ந்த 42 வயதுடைய ஏ.போல்ராஜ் மற்றும் அவரது மனைவி, பாடசாலை மாணவனான அவரது மகன் உள்ளிட்டோர் இவ்வாறு தாக்குதலிற்குள்ளானதாகவும், பொலிஸார் நீதியான விசாரணை மேற்கொள்ளவில்லை எனவும் அவர்கள் குற்றம் சாடுகின்றனர்.

சம்பவம் இடம்பெற்ற இரவு ஒரு மணியளவில் 119 இலக்க அவசர அழைப்புக்கு தகவல் வழங்கியதாகவும், அதன் பின்னர் வெள்ளம் காரணமாக பொலிஸார் அவ்விடத்திற்கு உடனடியாக வரமுடியாதுள்ளதாக தெரிவித்ததாகவும் பின்னர் காலையே அவர்கள் வருகை தந்ததாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்களை அயலவர் மற்றும் உறவினர்களின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் குறிப்பிடும் அவர்கள், காலை வந்த பொலிஸார் தீக்கிரையாக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் தடயப் பொருட்களை எடுத்து சென்றதாகவும் அன்று மாலை தடயவியல் பொலிஸார் வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டதாகவும், பாதிக்கப்பட்ட நபர்களின் வாக்குமூலத்திற்கு அமைவாக விசாரணைகளை முன்னெடுக்கவில்லை எனவும் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்த நிலையில் தமக்கு நீதி கிடைக்க வேண்டும் எனவும், தாக்குதல்தாரிகள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

# வடக்கில் கொரோனா தடுப்பூசி பெப்ரவரி முதல் வழங்கப்படும்

## மருத்துவர் கேதீஸ்வரன் தகவல்



யாழ்ப்பாணம்,ஜன.27

**எதிர்வரும் பெப்ரவரி மாதம் இரண்டாம் வாரத்திலிருந்து வடக்கு மாகாணத்தில் கொரோனா வைரஸ் தடுப்பூசி பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

யாழ். மாவட்டத்தில் கொரோனா தடுப்பூசி வழங்கல் தொடர்பில் ஆராயும் விசேட கலந்துரையாடல் அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இன்று ஆறு இலட்சம் கொரோனா தடுப்பூசிகள் இலங்கைக்கு கிடைக்கவுள்ளன. முதற்கட்டமாக சுகாதார உத்தியோகத்தர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படவுள்ளது. இரண்டாம் கட்டமாக பாதுகாப்புப் பிரிவினருக்கு வழங்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து எதிர்வரும் பெப்ரவரி மாதம் இரண்டாம் வாரத்திலிருந்து ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பொது மக்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப் படவுள்ளது- என்றார். (எ)

# தோட்ட மக்களுக்கு வசதியான குடியிருப்பு

கொழும்பு,ஜன.27

பெருந்தோட்ட மக்களுக்கு இடவசதிகளைக் கொண்ட வீட்டு வசதியை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அரசாங்கத்தால் வழங்கப்படும் உதவிக்கு மேலதிகமாக இந்திய அரசாங்கமும் இவர்களுக்கான வீட்டுத் திட்டத்துக்கு உதவ முன்வந்துள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு 550 சதுர அடியைக் கொண்ட வீட்டுடன் இரண்டு வீடமைப்புத் திட்டத்தை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

வீடொன்றை அமைப்பதற்கு 7 பேர்ச் காணி, மேலதிகமாக 3 பேர்ச் காணி அதாவது கால்நடை வளர்ப்புக்கான தேவையின் அடிப்படையில் வழங்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அமைச்சரவைக் கூட்டத்தில் இதுதொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# தடுப்பூசிகளை தனியார் தரப்பினருக்கு பகிர்ந்தளிக்க தீர்மானிக்கப்படவில்லை

## அமைச்சர் கெஹலிய விளக்கம்



கொழும்பு,ஜன.27

இந்தியாவிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் கொரோனா தடுப்பூசிகளை தனியார் தரப்பினருக்குப் பகிர்ந்தளிப்பது தொடர்பில் இதுவரையில் எவ்வித பேச்சுக்களும் முன்னெடுக்கப்படவில்லை. தடுப்பூசி தொடர்பில் சுகாதாரத் தரப்பினர் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்துவார்கள் என அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில்நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிலவும் நீண்டகால உறவு மற்றும் கொரோனா வைரஸ் தொற்று நிலைமைக்கு முகங்கொடுக்கும் போது, கடந்த ஒருவருட காலத்தில் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புக்களைக் கருத்தில் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 6 இலட்சம் கொரோனா தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்க இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கு இலங்கை அரசாங்கம் பாராட்டையும் நன்றிகளையும் தெரிவிப்பதற்கு அமைச்சரவையில் தீர்மானித்துள்ளது. இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் கொரோனா தடுப்பூசிகளை முதலில் சுகாதார தரப்பினருக்கும், இரண்டாவதாக பாதுகாப்புத் தரப்பினருக்கும், மூன்றாவதாக முதியவர்களுக்கும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசிகளை தனியார்த் தரப்பினர் மூலம் விநியோகிக்க இதுவரையில் எந்தவித பேச்சுக்களும் முன்னெடுக்கப்படவில்லை.

சிறந்த திட்டமிடலுக்கமைய கொரோனா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியும். அரசாங்கம் அதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளது. கொரோனா தடுப்பூசிக்கு கைமாறு கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அரசியல் மற்றும் இதர காரணிகளை அடிப்படையாகக்கொண்டு இந்தியாவிலிருந்து தடுப்பூசிகள் பெற்றுக் கொள்ளப்படவில்லை- என்றார். (எ)





# இந்திய விவசாயிகளின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழில் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.27


இந்திய விவசாயிகள் முன்னெடுத்துவரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நேற்று யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் யாழ். மத்திய பேருந்து நிலையத்துக்கு முன்பு இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இந்திய மத்திய அரசே உணவளிக்கும் உழவனின் உயிரோடு விளையாடாதே, உலகமே எதிர்த்து நிற்கும் இனி உன்னை, விவசாய உற்பத்திகளை விவசாயிகளே தீர்மானிக்க வேண்டும் காப்ரேட் நிறுவனங்கள் அல்ல, இந்திய மத்திய அரசே முடிவு செய் என வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (எ)

# முதல் 10 நாள்களில் கொரோனா தொற்றுக்கு வாய்ப்புக்கள் அதிகம்

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி தகவல்



கொழும்பு,ஜன.27

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானோரிடமிருந்து வைரஸ் பரவக்கூடிய அபாயம் முதல் 10 நாள்களில் அதிகம் உள்ளது. எனவே, இதுதொடர்பில் கண்டறிந்து வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய வழிமுறை ஒன்று உருவாக்கப்பட வேண்டும்என கொரோனா நோய்க் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் மருத்துவர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

மேலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள போதிலும், தற்போதுள்ள நிலைமையை மேலும் சீராக்குவதற்கு உரிய செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அத்தோடு எவ்வித அறிகுறிகளும் இன்றி தொற்றுடன் இனங்காணப்படுவர்களை முதல் 10 நாள்கள் சிகிச்சை நிலையங்களிலும் இறுதி 4 நாள்கள் வீடுகளிலும் மருத்துவக் கண்காணிப்பில் வைப்பது தொடர்பில் அவதானம் செலுத்த வேண்டும்.

கொரோனா கட்டுப்படுத்தலுக்காக தற்போது முன்னெடுக்கப்படுகின்ற பரிசோதனைகள், வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் காலம், தனிமைப்படுத்தல் வழிமுறைகள், கண்காணிப்பு நடவடிக்கைகள் என்பவற்றை தொடர்ந்தும் அவ்வாறே செயல்படுத்த வேண்டும். எதிர்காலத்தில் முன்வைக்கப்படுகின்ற ஆலோசனைகளுக்கு அமைய அவற்றில் மாற்றங்களை மேற்கொள்ள முடியும்- என்றார். (எ)

# ராஜபக்ஷ அரசு இப்போது விழி பிதுங்கி தவிக்கிறது

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு



கொழும்பு,ஜன.27

**எதிர்க்கட்சியில் இருந்த போது ஒவ்வொரு நாளும், தாம் தூண்டி, வளர்த்து விட்ட இனவாதிகள், பௌத்த தேரர்கள், தொழில்சங்கங்களின் பிடியிலிருந்து, விடுபட முடியாமல், நந்தசேன கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம், இன்று விழி பிதுங்கிப் போய் தத்தளிக்கிறது. வினை விதைத்தவன் வினையையே அறுப்பான் என்ற சான்றோர் மொழிக்கு உதாரணமாகத் திகழ்கிறது.**

கொழும்பு துறைமுக கிழக்கு முனைய விவகாரத்தில் இந்தியாவை பங்காளியாக்க கடந்த அரசு திட்டமிட்டபோது அதை எதிர்த்து தமது தொழில்சங்கங்களையும், தேரர்களையும் தூண்டிவிட்டு தெருவில் இறக்கி, அரசியல் செய்த ராஜபக்ஷ தரப்பு இப்போது அதே இந்தியாவுக்கு அதே கிழக்கு முனையத்தை அதே அடிப்படையில் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு: இது இவர்களது இனவாதப் பரம்பரை பழக்கம். எமது நல்லாட்சியின் போது தேசிய இனப்பிரச்னைக்கான குறைந்தபட்ச தீர்வுத் திட்டத்தை, புதிய அரசமைப்பாக நாம் கொண்டு வர முயற்சி செய்த போது அதை எதிர்த்து நாட்டில் பேரினவாதத் தீயை பற்ற வைத்தவர்கள் இவர்களே. இவர்களை ஒதுக்கித் தள்ளி ஆரம்பித்த பணியை முடிக்க அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முதுகெலும்பு இருக்கவில்லை.

அதைபோன்று அமெரிக்க அரசுடன் எம்.சி.சி. ஒப்பந்தம் தொடர்பில் நாம் பேசிய போது, அதை எதிர்த்து நாட்டை தீ வைத்து கொளுத்தி, இதுபற்றி ஒன்றுமே தெரியாத உடுதும்பர காஸ்யப்ப என்ற பௌத்த தேரரை கொண்டு வந்து எம்.சி.சிக்கு எதிராக சாகும்வரை உண்ணாவிரதம் இருக்க வைத்தவர்கள் இவர்களே.

பின்னர் ஆட்சிக்கு வந்தவுடன், எம்.சி.சி. ஒப்பந்தம் மூலம் அமெரிக்கா நன்கொடையாகத் தரவிருந்த 400 மில்லியன் அமெரிக்க டொலருக்கு ஆசைப்பட்டு அமெரிக்காவுடன் பேச்சுக்களை ஆரம்பித்தனர். எம்.சி.சி. ஒப்பந்தத்தில், 70 விகிதம் நல்லதே என உதய கம்மன்பில என்ற தமிழ், முஸ்லிம் மக்களை சதா கரித்து கொட்டித்தீர்க்கும் அமைச்சர் சொன்னார். ஆனால் கடைசியில் "சரிதான் போங்கடா" என அமெரிக்கா எம்.சி.சி. ஒப்பந்தத்தையும் 400 மில்லியன் அமெரிக்க டொலரையும் எடுத்துக்கொண்டு போயே போய் விட்டது.

"ஐயோ, கைக்கு வந்தது, வாய்க்கு எட்டவில்லையே" என கையை விட்டு போய் விட்ட 400 மில்லியன் அமெரிக்க டொலர் பணத்தை நினைத்து நந்தசேன கோட்டாபய ராஜபக்ஷ அரசின் உள்ளே ஒப்பாரி ஓலம் கேட்டது.

அதைபோன்று கொழும்பு துறைமுக கிழக்கு முனைய விவகாரத்தில் இந்தியா, ஜப்பான் நாடுகளை பங்காளிகளாக்க கடந்த அரசு திட்டமிட்டபோது அதை எதிர்த்து தமது தொழில்சங்கங்களையும் தேரர்களையும் தூண்டி விட்டு தெருவில் இறக்கி அரசியல் செய்த மகிந்த ராஜபக்ஷ, விமல் வீரவன்ஷ, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில ஆகியோர் அடங்கிய கூட்டணி இன்று நந்தசேன கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் ஆட்சி அமைத்தவுடன் சுருதி இறங்கிப் பேசுகிறது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியுடன் மோதவும் முடியாமல் இந்தியாவின் பாதுகாப்புக்கு சிக்கலை ஏற்படுத்தியுள்ள இதே கொழும்பு துறைமுகத்தில் 85 விகித பங்குரிமையுடன் இவர்கள் சீனாவின் சைனா மெர்ச்சன்ட் நிறுவனத்துக்கு வழங்கியுள்ள சீஜசீடி என்ற இன்னொரு முனையத்தை திரும்பி வாங்கவும் முடியாமல் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கம் விழி பிதுங்கிப் போய் நிற்கிறது.

இந்நிலையில் இந்த அரசில் இருக்கும் ஒரு அரை அமைச்சரான நிமால் லான்ச "கொழும்பு துறைமுக கிழக்கு முனையத்தை யார் தடுத்தாலும் இந்தியாவுக்கு வழங்கியே தீருவோம்" என வெட்டி வீராப்பு பேசுகிறார். இதை இவர் இன்றைய எதிரணியான எங்களிடம் கூறத் தேவையில்லை. தெரியாமல் வாக்களித்த பொதுமக்களிடம் கூறத் தேவையில்லை. எதிர்க்கட்சியில் இருக்கும் போது இவர்களே ஊட்டி வளர்த்த இவர்களது கட்சியின் தொழில்சங்கங்கள் மற்றும் எல்லே குணவன்ஷ தேரர், ஓமல்பே சோபித தேரர், முருத்தெட்டுகம தேரர் ஆகியோரிடம் கூற வேண்டும்-என்றார். (எ)







# இந்திய விவசாயிகளை ஆதரித்து மலையகத்தில் நேற்று ஆர்ப்பாட்டம்

ஹற்றன்,ஜன.27

இந்தியாவில் விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்தை ஆதரித்து மலையகத்தில் ஹற்றன் மல்லியப்பு சந்தியில் மலையக சிவில் அமைப்புக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கம் மற்றும் மொன்லார் நிறுவனம் ஏற்பாடு செய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள், இந்திய விவசாயிகளின் போராட்டத்தை ஆதரிக்கும் பதாகைகளை ஏந்தியிருந்தனர். அத்துடன் இலங்கையில் அதானி நிறுவனம் ஆழமாக காலூன்றுவதைக் கண்டிக்கும் பதாகைகளையும் ஏந்தியிருந்தனர்.

இந்திய விவசாயிகளின் நியாயமான கோரிக்கையை அந்நாட்டு அரசாங்கம் மீள்பரிசீலனை செய்யவேண்டும் எனவும், சிறு விவசாயிகளின் உரிமைகளையும் சலுகைகளையும் நசுக்குவதிலிருந்து அவர்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தி 60 நாள்கள் நடைபெறும் தொடர் போராட்டத்தில் இதுவரை 66 விவசாயிகள் உயிரிழந்ததற்கு இதன்போது அனுதாபம் தெரிவிக்கப்பட்டதுடன், இந்திய மத்திய அரசுக்கு கண்டனமும் வெளியிடப்பட்டது.

இந்தியாவின் அதானி கம்பனி தற்போது இலங்கையின் கிழக்கு முனையத்தை பெற்றுக்கொள்வது போல ஏனைய துறைகளின் நிலங்களையும் பெறுவதற்கு திரைமறைவில் சதி நடப்பதாகவும் அதனால் எதிர்காலத்தில் பெருந்தோட்ட நிலங்களை அழிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் போராட்டக்காரர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்திய நிறுவனமான அதானியின் செயல்பாடுகளை இந்தியப் பிரஜைகளே கண்டித்து வெறுக்கும் நிலையில் அந்த நிறுவனம் இலங்கையில் தனது செயல்பாடுகளை முன்னெடுப்பதை அனுமதிக்க முடியாது. இதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்கவும் கூடாது எனவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர். (எ)

# தடைசெய்யப்பட்ட தொழில் முறைகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

பூநகரி,ஜன.27

பூநகரி கடல் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து வகையான சட்டவிரோத கடற்றொழில் முறைகளும் நிறுத்தப்பட வேண்டும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும் கடற்றொழில் அமைச்சராக தான் இருக்கும் வரை எக்காரணத்துக்காகவும் தயவுதாட்சண்யம் காண்பிக்கக் கூடாது எனவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பூநகரி பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் முன்னாயத்த கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

பூநகரி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற தடைசெய்யப்பட்ட தொழில் நடவடிக்கைகள் உடன் நிறுத்தப்படவேண்டும்.

இந்த சட்டவிரோத செயல்பாடுகளை நிறுத்துவதற்கு கடற்றொழில் திணைக்களம், கடற்படை, பொலிஸார் ஆகிய தரப்புக்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்-என்றார். (எ)

# கொரோனா தொற்று நெருக்கடியிலும் சுங்க சேவைகள் நிறுத்தப்படவில்லை

## பணிப்பாளர் நாயகம் ரவிப்பிரிய பெருமிதம்

கொழும்பு,ஜன.27

நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் ஏற்பட்டதிலிருந்து தற்போதுவரை பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் கூட சுங்கத்திணைக்களத்தின் சேவைகள் ஒருபோதும் இடைநிறுத்தப்படவில்லை என்றும் தொடர்ந்தும் வெளிப்படைத்தன்மையுடனான சிறந்த சேவையை நாட்டுக்கு வழங்கி வருவதாகவும் சுங்கத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜி.வி. ரவிப்பிரிய தெரிவித்துள்ளார்.

சர்வதேச சுங்கத் தினத்தை முன்னிட்டு நேற்று கொழும்பிலுள்ள சுங்கத்திணைக்களத்தில் விசேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஏனைய வருடங்களை விடவும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் இம்முறை சர்வதேச சுங்கத் தின நிகழ்வுகளை நடத்திக்கொண்டிருக்கின்றோம். கடந்த வருடத்தில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க வேண்டியேற்பட்ட அதே வேளை, அது எமக்குப் பல பாடங்களையும் கற்றுத்தந்திருக்கிறது. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு நாடுகளுக்கு இடையிலான பயணங்கள் இடைநிறுத்தப்பட்ட போதிலும் ஏற்றுமதி, இறக்குமதி செயற்பாடுகளைப் பாதுகாப்பான முறையில் முன்னெடுப்பதற்கும் நாம் நடவடிக்கை எடுத்தோம். - என்றார். (எ)

ஈழநாடு



# தரம் 6 இல் இருமொழி கற்கையை தேர்ந்தெடுக்கலாமா?



**ஆர்.சுதர்சினி,**
*National Diploma in Mathematics (Englis medium) (Merit) BEd, Reading MSC (Science Educat)*

**'அரசனுக்கு அவனது நாட்டிலேதான் சிறப்பு ஆனால் கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு'**

ஆகவே நாம் செல்லும் இடமெல்லாம் சிறப்பு அடைய வேண்டுமானால் கற்கவேண்டும். எதனை கற்க வேண்டும்? இதுதான் நம்மில் பலருக்கு உள்ள சந்தேகம். எல்லோருக்கும் கற்கின்றோம். எதற்காகக் கற்கின்றோம்

1. பெற்றோரின் கட்டளைக்காக கற்கின்றார்கள்.
2. அறிவை தேட கற்கின்றார்கள் உயர்ந்த தொழிலை, பதவியில் உயர் அந்தஸ்தை பெற கற்கின்றார்கள்.
4. கௌரவத்துக்காக கற்கிறார்கள்.
5. எல்லோரும் கற்கிறார்கள் என்பதற்காக கற்கின்றார்கள்.
6. பொழுது போக்கிற்காக கற்கிறார்கள்.
7. போட்டிக்காக கற்கின்றார்கள்.
8. உழைப்பதற்காக கற்கின்றார்கள்

இன்னும் பல பல தேவைகளுக்காக கற்கின்றார்கள். சரி இவ்வாறு எல்லாம் கற்கின்ற நாம் எமது நோக்கத்தை அல்லது இலச்சியத்தை அடைகின்றமோ? நம்மில் பலர் இல்லை என்றே கூறுகின்றனர்.

கற்பிப்பதன் நோக்கம் நாட்டிற்கு தேவையான சிறந்த பிரஜையை உருவாக்குவது ஆகும். (Make good citizen for the country) ஆகவே பெற்றோராகிய நாம் நமது பிள்ளைகளை வழிநடத்த வேண்டிய பொறுப்பில் உள்ளோம். அதாவது மாணவர்கள் சிறுவயதில் அதாவது தரம் 9 வரை சுயமாக முடிவெடுப்பதில் தயக்கமாக உள்ளனர். அவர்கள் அதற்கான முதிர்ச்சியை அடைவதில்லை. இக்காலத்தில் பெற்றோர் சொல்படியே கல்வியில் பெரும்பாலான பிள்ளைகள் முடிவெடுக்கின்றனர். ஆகவே பெற்றோராகிய நாங்கள் தரம் 5 வரை எமது பிள்ளை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்ய வேண்டும் என பல வழிகளில் பிள்ளைகளை கற்பித்து அவர்களை சித்தி எய்த வைக்கின்றோம். பின்னர் அவர்களுக்கு என்ன செய்கின்றோம்.

தரம் 6 க்கு செல்லும் மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கு இரண்டு மொழி ஊடகங்கள் உண்டு. இதில் பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் குழப்பம். எந்த மொழியில் பிள்ளையை கற்பிப்பது என்பதுதான்.

1. தாய்மொழியிலா அல்லது
2. தாய்மொழியையும் ஆங்கிலத்தையும் இணைத்தா?

நம்மில் பலர் இப்போதும் கதைப்பது உங்களது பிள்ளை தமிழில் படிக்கப் போகிறாரா அல்லது ஆங்கிலத்தில் படிக்கப்போகிறாரா?, பெற்றோர்களே தற்போது தரம் 6 இலிருந்து தரம் 11 வரை ஆங்கில மொழிமூலமாக மட்டும் கற்றல் நடப்பதில்லை. முன்னர் 2001ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்றுநிருபம்இல 2001/05 படி விஞ்ஞான பாடங்கள் ஆங்கில மொழி மூலம் (கணிதம், விஞ்ஞானம்) கற்பிக்கப்பட்டன. இச்சுற்று நிருபம் 23.02.2001 வெளியிடப்பட்டது. அதன்படி நாட்டில் பிரபல்யமான பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் ஆங்கில மொழியில் கற்பிக்கப்பட்டன. இதன்போது தமிழ், சிங்கள மாணவர்கள் ஒரே வகுப்பில் இருந்து ஆங்கிலமொழி மூலம் விஞ்ஞான கணித பாடங்களை கற்றனர். (உதாரணமாக, கொழும்பு றோயல் கல்லூரி, D.S.சேனநாயக்கா கல்லூரி, இசிப்பத்தான கல்லூரி, கேகாலை சென்மேரிஸ் கல்லூரி, கண்டி உயர்கல்லூரி ஆகியன இவற்றுள் சில) பின்னர் 2007ம் ஆண்டு கல்வி அமைச்சு இதில் சிறு மாற்றத்தை ஏற்படுத்தி தனியாக கற்பிக்காது. தாய்மொழியில் எண்ணக்கருவை பிள்ளைக்கு விளங்கப்படுத்தி பின்னர், ஆங்கில மொழியில் விளக்கத்தை கொடுக்கும் படியாக அதாவது தாய்மொழி, ஆங்கிலமொழி இரண்டையும் இணைத்து இரு மொழி மூல கற்கை நெறியை (Bilingual education) 2007ம் ஆண்டு அறிமுகப்படுத்தியது. இவ் இரு மொழி கல்வியூடாக கணிதம், விஞ்ஞானம், புவியியல், குடியியல், சுகாதாரமும் உடற்கல்வியும் என 5 பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. மாணவன் 5 பாடங்களையோ அல்லது கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை மட்டுமோ இரு மொழியில் தொடர முடியும்.

> **நம்மில் பலர் இப்போதும் கதைப்பது உங்களது பிள்ளை தமிழில் படிக்கப் போகிறாரா அல்லது ஆங்கிலத்தில் படிக்கப்போகிறாரா?, பெற்றோர் களே தற்போது தரம் 6 இலிருந்து தரம் 11 வரை ஆங்கில மொழிமூல மாக மட்டும் கற்றல் நடப்பதில்லை.**

இங்கு ஆசிரியர் ஆங்கில மொழியில் கற்பிக்கும் போது மாணவன் விளங்கிக் கொள்வதற்கு இடர்படுவானாயின் அவ்விடத்தில் நிறுத்தி தாய்மொழியில் விவரிப்பார். தரம் 6, தரம் 7 மாணவர்க்கு இருமொழி கற்பிக்கும் ஆசிரியர் எண் ணக்கருக்களை தமிழிலேயே கொடுப் பார். அத்துடன் கூடுதலாக தாய்மொழியே பயன்படுத்துவார். பின்னர் தரம் 8, 9, 10, 11 செல்லும் போது ஆங்கில மொழியே கூடுதலாக உபயோகிப்பர்.

எனவே தரம் 6 இல் இருமொழியில் இணைத்து கற்பதற்கு மாணவர்கள் பயம்கொள்ள தேவையில்லை. இருமொழியில் கற்கை தேர்ச்சிகளாக

1. சமூக நல்லிணக்கமும் ஒருமைப்பாடும்
2. 2ம் நிலை கல்விக்கு சகல மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குதல்
3. சமூகத்தில் இருமொழிகளையும் உபயோகித்து உயர்ந்த நிலையை அடைய வழிய மைத்து கொடுத்தல்
4. உலகில் சிறந்த தொழில் வாய்ப்பைப் பெறுவதற்கு கல்வியை சமூக, பொருளாதார, அரசியல் மற்றும் கலாசாரத்துக் கூடாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஆகவே, ஒரு மாணவன் தனியார் பாடசாலை ஒன்றில் இதே கல்வியை பெறுவதற்கு பல இலட்சங்களை செலவழிக்க வேண்டி ஏற்படும். அத்துடன் க.பொ.த. உயர்தரத்தன் பின்னர் மாணவன் கலைப் பாடம் தவிர்ந்த ஏனைய பாடங்களைஆங்கில மொழியில்தான் கற்க வேண்டும். பல்கலைக் கழகங்களில் கலைப்பாடம் தவிர்ந்த ஏனைய துறைகள் எல்லாமே ஆங்கில மொழியில்தான் கற்பிக்கப்படுகின்றன. அங்கு கடந்தகால பதிவுகளின் படி (2010) ஆம் ஆண்டின் பின்னர் இருமொழியில் கற்று பல்கலைக்கழகம் சென்ற மாணவர்கள் கற்றலில் மொழி ரீதியாக இடர்பாடுகளை சந்தித்தது மிகக் குறைவு.

தரம் 6இல் முதலாம், இரண்டாம் தவணைகளில் சில மாணவர்களது அடைவு சக தமிழ்மொழி மூல மாணவர்களை காட்டிலும்குறைவாக இருக்கலாம். ஆனால் பின்னர் அவர்கள் படிப்படியாக முன்னேறுவர். எனவே தரம் 6 இல் மாணவன் பெறும் புள்ளிகளை வைத்து அவனால் இரு மொழியில் கற்கமுடியாது என அவனை தமிழ்மொழி மூலத்திற்கு பெற்றோர்மாற்றுவதற்கு முடிவு எடுக்கக்கூடாது. கற்பதற்கு மொழி ஒரு தடையல்ல. இரு மொழியில் தேர்ச்சி பெற்ற ஒருவன் இரண்டு மனிதர்களுக்கு சமனானவன். இரு மொழியில் கற்கும் ஒரு மாணவன் தரம் 10, தரம் 11 இல் ஆங்கிலத்தில் சரளமாக பேசுவான். சிறந்த தொழில்வாய்ப்பைப் பெற்றுக்கொள்வான். தகவல் தொழில்நுட்பத்தில் அதாவது கணணி, இணையம், மின்னஞ்சல் போன்வற்றை மிக இலகுவாக கையாள்வான். இது எப்போதும் மாணவனுக்கு உதவி செய்யும். எனவே உங்களுக்கு அச்சம் ஏற்பட்டால் உங்கள் பாடசாலையில் படித்து கொண்டிருக்கும் அல்லது படித்து வெளியேறி இருக்கும்இரு மொழியில்கல்வி கற்ற அக்கா, அண்ணாவிடம் அல்லது இரு மொழி கற்பிக்கும் ஆசிரியரிடமோ கேட்டு உங்கள் சந்தேகங்களை நீக்கிக் கொள்ளுங்கள். ■

# ஜனநாயகப் போராட்டங்களை ஒடுக்குகின்றதா ரஷ்யா?



## ஓரணியில் திரளும் உலக நாடுகள்






ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸே நவால்னிக்கு ஆதரவாகவும், அவர் சமீபத்தில் கைது செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் அந்த நாட்டில் நடைபெற்று வரும் போராட்டங்களை மேற்குலக நாடுகள் ஊக்குவிப்பதாக ரஷ்ய அரசு குற்றஞ் சாட்டியுள்ளது.

கடந்த சனிக்கிழமையன்று, ரஷ்யா முழுவதும் குவிக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கான காவல்துறையினரை மீறி பல்லாயிரக் கணக்கான மக்கள் எதிர்க்கட்சித் தலைவர் நவால்னிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் நடைபெற்ற பேரணிகளில் பங்கேற்றனர். இதையடுத்து பேரணியில் பங்கேற்றதாக சுமார் 3,500 பேர் காவல்துறையால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், இந்த பேரணியில் “மிகவும் குறைந்தளவிலான” மக்களே பங்கேற்றதாக ஞாயிற்றுக்கிழமை பேசிய அதிபர் விளாடிமிர் புடினின் செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார்.

இந்த நிலையில், ரஷ்ய அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், அந்த நாட்டுக்கு எதிராக பொருளாதார தடைகளை விதிக்க வலியுறுத்தி ஐரோப்பிய ஒன்றியத்தின் உறுப்பு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் கூட்டம் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

குறிப்பாக, இந்த “கைது நடவடிக்கையுடன்தொடர்புடைய ரஷ்ய அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கைகள்” எடுக்கப்பட வேண்டுமென்று எஸ்டோனியா, லாட்வியா மற்றும் லித்துவேனியாவின் வெளியுறவு அமைச்சர்கள் வலியுறுத்தினர்.

நவால்னி கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைகளை முடுக்கிவிடுமாறு போலந்தின் அதிபர் ஆண்ட்ரெஜ் துடாவும் ஐரோப்பிய ஒன்றியத்தை வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் மீது தீவிரமான விமர்சனங்களை முன்வைத்து வரும்அந்த நாட்டின்எதிர்கட்சித்தலைவரான அலெக்ஸே நவால்னி கடந்த வாரம் ரஷ்யாவில் நுழைந்த உடனேயே, காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். இதையடுத்து தன் மீதான கைது நடவடிக்கைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபடுமாறு அவர் அழைப்பு விடுத்தார்.

இதையடுத்து ரஷ்யாவின் தொலைதூர கிழக்குப் பகுதி மற்றும் செயின்ட் பீற்றர்ஸ் பேர்க் நகரத்திலும், சைபீரியாவிலிருந்து மொஸ்கோ வரை என நாடுமுழுவதும் சுமார் 100 நகரங்களில் கடந்த சனிக்கிழமை ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

குறிப்பாக, ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவில், வன்முறை தடுப்புப் பிரிவு காவல்துறையினர் ஆர்ப்பாட்டக்காரர்களை அடித்து இழுத்துச் செல்வதைக் காண முடிந்தது.

### பரந்துபட்ட போராட்டம்

ரஷ்யா முழுவதும் பரந்துபட்ட அளவில் முன்னெடுக்கப்பட்ட இந்த போராட்டம் முன்னெப்போதுமில்லாத வகையில் இருந்ததாக அரசியல் கண்காணிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், தலைநகர் மாஸ்கோவை பொறுத்தவரை, கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவுக்கு போராட்டம் தீவிரமாக இருந்ததாகவும் கூறப்படுகிறது.

காவல்துறையினரின் கடுமையான எச்சரிக்கை மற்றும் தடுப்பை மீறி போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு பேருந்துகளில் பயணித்தவர்கள் கையசைத்தும், வாகன ஓட்டிகள் ஒலியெழுப்பியும் ஆதரவு தெரிவித்தது அவர்களை உற்சாகப்படுத்தும் படியாக இருந்தது.

இந்த நிலையில், மொஸ்கோவில் உள்ள அமெரிக்க தூதரகம் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்பதைத் தவிர்க்க வேண்டுமென்று வெளியிட்ட அறிவிப்புக்கு கடும் எதிர்ப்பு கிளம்பியது. இதுபோன்ற கருத்தை தெரிவித்ததன்மூலம், “தங்களது நாட்டின் உள்விவகாரங்களில்” அமெரிக்கா தலையிடுவதாக ரஷ்ய அதிபர்விளாடிமிர்புடினின்செய்தித்தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கண்டனம் தெரிவித்தார்.

எனினும், இதுபோன்ற அறிவிப்புகள் “வழக்கமான செயல்பாடே” என்று மொஸ்கோவிலுள்ள அமெரிக்க தூதரகம் தெரிவித்துள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னதாக, போராட்டத்தில் பங் கேற்றதற்காக தடுத்து வைக்கப்பட்ட வர்களை விடுவிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்த அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தலைமையிலான நிர்வாகம், காவல்துறையினரின் செயல்பாட்டுக்கு கடும் கண்டனம் தெரிவித்தது.

### மேற்குலகு மீது சந்தேகம்

அதே சூழ்நிலையில், மேற்குலக நாடுகள் மொஸ்கோவிலுள்ள தங்களது தூதரகங்களின் வாயிலாக ஆர்ப்பாட்டக்காரர்களை ஊக்குவிப்பதாக பிரிட்டனிலுள்ள ரஷ்ய தூதரகம் குற்றம்சாட்டிருந்தது.

ரஷ்யாவின் வெளியுறவு அமைச் சக செய்தித் தொடர்பாளர் மரியா ஜாகரோவா, மேற்கத்திய நாடுகளின் விமர்சனங்கள், “மேற்கத்திய போலி ஜனநாயகம் மற்றும் போலிதாராளமயத்துடன்தொடர்புடைய மேற்கத்திய சிந்தனையின் வெளிப்பாடு”என்று கடும்எதிர்ப்பை தெரிவித்திருந்தார்.



ஆர்ப்பாட்டக்காரர்களை கைது செய்யும் ரஷ்யாவின் செயல் “சர்வாதிகாரத்தை நோக் கிச் செல்வது” என்று கருத்துத் தெரிவித்துள்ள பிரான்சின் வெளியுறவுத்துறை அமைச் சர், ரஷ்யாவிற்கு எதிராக மேலும் பொருளாதாரத் தடைகளை விதிக்க உலக நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் ஒரு விஷத் தன்மை கொண்ட ரசாயனத்தால் ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸே நவால்னியை கொலை செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதில் கிட்டத்தட்ட இறக்கும் நிலைக்குச் சென்று உயிர் தப்பிய நவால்னி, சிகிச்சை முடிந்து கடந்த வாரம் ஜெர்மனியிலிருந்து ரஷ்யாவுக்கு வந்தவுடன் விமான நிலையத்திலேயே கைது செய்யப்பட்டார்.

### ஏன் நவால்னி தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்?

அலெக்ஸே நவால்னி மீது கையாடல் வழக்கொன்று பதியப்பட்டு அதில் அவருக்கு ஏற்கனவே தண்டனையும் வழங்கப்பட்டு விட்டது. இந்த வழக்கு அரசியல் காரணங்களால் தன் மீது தொடுக்கப்பட்டதாக நவால்னி கூறுகிறார். இந்த தண்டனை காலத்தில் நவால்னி தொடர்ந்து விதிமீறல் செய்ததால் கடந்த டிசெம்பர் 29 முதல் தேடப்பட்டு வருகிறார் என ரஷ்யாவின் சிறைத்துறை, கடந்த வாரம் (ஜனவரி 17) ஒரு அறிக்கை வெளியிட்டது.

இது மட்டுமின்றி ரஷ்ய அரசு தரப்பு, நவால்னி பல்வேறு அமைப்புகளுக்குச் செய்த பணப் பரிவர்த்தனை தொடர்பாக ஒரு குற்றவியல் வழக்கையும் பதிந்திருக்கிறது. தான் ரஷ்யாவுக்கு வருவதைத் தடுத்து, பேச்சை நசுக்குவதற்காகவே தனக்கு எதிராகப் புதின் வழக்குகளை சோடிப்பதாகக் குற்றஞ்சாட்டுகிறார் நவால்னி.

# பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தம் ஐரோ. ஒன்றியத்திடம் இலங்கை இணக்கம்

கொழும்பு,ஜன.27

பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் ஐரோப்பிய ஒன்றியத்திடம் தெரிவித்துள்ளது.இலங்கையும் ஐரோப்பிய ஒன்றியமும் தங்கள் கூட்டு ஆணைக்குழுவின் 23 ஆவது சந்திப்பை நேற்று முன்தினம் காணொலி காட்சி வாயிலாக நடத்தின.

இந்தச் சந்திப்பின்போதே இலங்கை பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதனை சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ற வகையில் மாற்றவேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இதற்குப் பதிலளித்துள்ள இலங்கை அரசாங்கத் தரப்பினர், பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் உரிய மாற்றங்களை மேற்கொள்ள உரிய ஏற்பாடுகளை மீளாய்வுக்கு உட்படுத்த திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

மேலும் இதன்போது, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை மக்களுக்கு இடையிலான உறவை மேலும் வலுப்படுத்த விருப்பம் வெளியிடப்பட்டுள்ளது. (எ)



## மஹறசின் சிறைக்குள் வீசப்பட்ட 54 பொதிகள்மீட்பு

கொழும்பு,ஜன.27

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் 12 திகதி முதல் டிசெம்பர் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் மஹறசின் சிறைச்சாலை சுவர் மீது 54 பொதிகள் வீசப்பட்டுள்ளன என சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தப் பொதிகளில் 47 கையடக்க தொலைபேசிகள், 22 சிம் அட்டைகள், கையடக்க தொலை பேசிக்குப் பயன்படுத்தப்படும் 57 மின்கலங்கள், 13 மின்னேற்றிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இதுதவிர 16 ஹெரோயின் சிறிய பொதிகளும், 9 ஐஸ் ரக போதைப்பொருள் பொதிகளும், சிறிய ரக கஞ்சா போதைப் பொருள் பொதிகள் 37, போதை மாத்திரைகள் 07, 569 புகையிலைகள் மீட்கப்பட்டுள்ளன என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் 71 சிகரெட்டுக்கள், 14 லைட்டர்கள், 7 பீடிக் கட்டுக்கள், 400 மில்லி லீற்றர் மதுபான போத்தல் என்பனவும் மீட்கப்பட்டுள்ளன. (எ)

## பி.சி.ஆர்.சோதனைக்கு அரச தரப்பு எம்.பிக்கள் ஒத்துழைப்பு போதாது

கொழும்பு,ஜன.27

**அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் தங்களை பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்த தயங்குவதோடு கொரோனா தடுப்பு பரிசோதனைகளுக்கு போதிய ஒத்துழைப்பு வழங்க மறுப்புத் தெரிவித்து வருகின்றனர் என சுகாதாரத்துறை அதிகாரிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளர்.**

கடந்த வாரம் அரச தரப்பையும் எதிர்க்கட்சிகளையும் சேர்ந்த 90 பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே தங்களைப் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது. இந்நிலையில் கொரோனா வைரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மத்தியில் மேலும் பரவுவதைத் தடுப்பதற்காக அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் பி.சி.ஆர். பரிசோதனையை முன்னெடுக்குமாறு சபாநாயகர் கேட்டுக்கொண்டுள்ளார்.

பி.சி.ஆர். பரிசோதனை விடயத்தில் அரச பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒத்துழைக்கவில்லை என சுகாதாரத்துறை அதிகாரிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

ஏற்கனவே பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தொடர்பிலிருந்த மேலும் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்றும் அதிகாரிகள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

## தனிமைப்படுத்தலை மீறிய மேலும் 24 பேர் சிக்கினர்

### அஜித் ரோஹண தகவல்

கொழும்பு,ஜன.27

முகக்கவசம் அணியத்தவறிய மற்றும் சமூக இடைவெளியை பின்பற்றத்தவறிய குற்றச்சாட்டில் நேற்றுக்காலை 9 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களுக்குள் மேலும் 24 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதியிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் மேற்படி குற்றச்சாட்டின் பேரில் இதுவரை 2 ஆயிரத்து 770 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 2600 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது- என்றார். (எ)

## தனிமைப்படுத்தல் சட்டத்தைப் பின்பற்றாத 1089 நிறுவனங்கள் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு,ஜன.27

கடந்த 10 ஆம் திகதியிலிருந்து மேல் மாகாணத்தில் தனியார் மற்றும் அரச நிறுவனங்களில் தனிமைப்படுத்தல் தொடர்பான சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைப் பின்பற்றாத 1089 நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் தனியார் மற்றும் அரச நிறுவனங்களில் தனிமைப்படுத்தல் தொடர்பான சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதுவரை 7ஆயிரத்து 728 நிறுவனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதில் 6 ஆயிரத்து 639 நிறுவனங்கள் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைச் சரியான முறையில் பின்பற்றுவது உறுதிப்படுத்தப்பட்டது.

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளைப் பின்பற்றத் தவறிய 1089 அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எதிர்காலத்தில் எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)




## இலங்கை உட்கட்டமைப்பு திட்டத்துக்கு இந்தியா அர்ப்பணிப்புடன் ஒத்துழைப்பு

### உயர்ஸ்தானிகர் பாக்லே உறுதி

கொழும்பு,ஜன.27

இலங்கைக்கான வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பது தொடர்பிலும் துறைமுகங்கள், விமான நிலையங்கள், எரிசக்தி - மீள் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற உட்கட்டமைப்பு திட்டங்களில் ஒத்துழைப்பது தொடர்பில் இந்தியா அர்ப்பணிப்புடன் உள்ளது என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 72ஆவது குடியரசு தினசெய்தியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையும் இந்தியாவும் இணைந்து பணியாற்றி சமகால பொருளாதார மற்றும் ஏனைய சவால்களை வெற்றிகொள்ள முடியும்.

கடந்த வருடம் மே மாதம் 8 ஆம் திகதி 12 தொன் மருந்துப் பொருள்களுடன் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட அந்தத் தருணத்திலிருந்து இருதரப்பு ஈடுபாட்டை முன்னோக்கி நகர்த்துவதற்கான நோக்கத்தின் உணர்வுடன் நான் இலங்கை அரசாங்கத்துடனும் மக்களுடனும் இணைந்து பணியாற்றியுள்ளேன்.

கொரோனா தொற்று சவால்களுக்கு மத்தியிலும் இருதரப்பினாலும் உயர்மட்ட பேச்சுக்களின் தொடர்ச்சியைப் பேணியுள்ளோம். உயர்மட்ட தலைவர்களின் இணையவழி பேச்சுக்கள் மூலம் இரு தரப்பு உறவுகளைத் தொடர்ந்து பேணி வருகின்றோம்.



கொரோனா வைரஸால் உருவாகியுள்ள சவால்களை எதிர்கொள்வதற்கு இரு நாடுகளும் பரஸ்பரம் ஆதரவளித்துள்ளன. கூடிய விரைவில் மருந்துகளை விநியோகிப்பதன் மூலம் இந்த ஈடுபாட்டை எதிர்வரும் வாரங்கள், மாதங்களில் ஆழமாக்கவுள்ளன- என்றார். (எ)

# ஐ.நா. ஆணையாளரின் அறிக்கையை அரசு முழுமையாக ஏற்றுக்கொள்ளாது

## என்கிறார் அமைச்சர் கெஹலிய



கொழும்பு,ஜன.27

**ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை அரசாங்கம் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.**

இலங்கையின் இறைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் எதிலும் அரசாங்கம் ஈடுபடாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

மனித உரிமைகள் பிரச்னைகளுக்குப் பொருத்தமான தீர்வு என இலங்கை கருதும் விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கான உரிமை அரசாங்கத்துக்கு உள்ளது.

இதேவேளை நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரணை வழங்கிய தீர்மானத்தை ராஜபக்ஷ அரசாங்கம் ஒருபோதும் நடைமுறைப்படுத்தப்போவதில்லை. கடந்த அரசாங்கத்தின் தீர்மானம் நாட்டு நலனுக்கு உகந்தது இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.(எ)

# வீதி விபத்துக்களில் சிக்கி 6 நாள்களில் 30 பேர் பலி

## 90 பேர் படுகாயம்

கொழும்பு,ஜன.27

ஜனவரி 17 - 22 வரையான ஆறு நாள்களில் நாடு முழுவதும் பதிவான 427 வீதி விபத்துக்களில் 30 பேர் உயிரிழந்ததுடன் 90 பேர் படுகாயமடைந்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இதன்போது 189 பேர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதிப் பொலிஸ் அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

இந்த 427 வீதி விபத்துக்களின் போது 119 வாகனங்கள் சேதங்களுக்குள்ளாகியுள்ளன.

இவ்வாறு விபத்துக்களில் சிக்கி உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் சிக்குண்டவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 வயது குழந்தை உட்பட நால்வருக்கு கொரோனா

பதுளை, ஜன.27

பதுளை மஹியங்கனையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 வயது குழந்தை உட்பட நான்கு பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என பொதுச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மூன்று வயது குழந்தையின் தாய், தந்தை மற்றும் சகோதரி ஆகியோருக்கே கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் மஹியங்கனையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இவர்களுக்கு தொற்று உள்ளது தெரியவந்துள்ளது.

குறித்த குடும்பத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், கொழும்பில் ஆடைத்தொழில் சாலை யொன்றில் பணியாற்றிவிட்டு, விடுமுறையில் வீட்டுக்கு வந்துள்ளார்.

மூன்று தினங்கள் அவர் வீட்டில் தங்கியிருந்து விட்டு மீளவும் கொழும்புக்கு சென்றுள்ளார்.

இந்நிலையில் அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதியாகியது.

இந்த இளைஞன் மூலமாகவே, அவரது குடும்ப உறுப்பினர்கள் நால்வருக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்நிலையில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நால்வரும், காகொல்லை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ளனர். (எ)

# கரடி தாக்கி குடும்பஸ்தர் படுகாயம்

முல்லைத்தீவு,ஜன.27

புதுக்குடியிருப்பு மன்னாகண்டல் பகுதியில் நேற்று முன்தினம் மாலை வயல் வேலைக்குச் சென்ற விவசாயி கரடி தாக்கி படுகாயமடைந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோம்பாவில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த (வயது - 39) இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு கைவிரல் ஒன்று முறிந்த நிலையிலும் காலிலும், கையிலும் கரடியின் கடிகாயங்களுக்குள்ளான நிலையிலும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் பெய்த கடும் மழையால் காட்டில் வெள்ளம் வற்றாத நிலை காணப்படுகின்ற நிலையில் யானைகள், கரடிகள் மேட்டு நிலங்கள் நோக்கி வந்து மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தி வருகின்றன. (எ)

# 500 இற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் இலங்கைவர விண்ணப்பம்

கொழும்பு,ஜன.27

விமான நிலையங்களை மீண்டும் திறந்து ஐந்து நாள்களுக்குள் 500 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தர விண்ணப்பித்துள்ளனர் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கட்டுநாயக்கா பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய வளாகத்தில் நேற்றுக் காலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், மீண்டும் சுற்றுலாப் பயணிகளுக்காக நாடு திறக்கப்பட்டுள்ளமையை ஒரு தரப்பினர் வரவேற்றாலும் மற்றுமொரு தரப்பினர் அதனை எதிர்க்கின்றனர்.

இருப்பினும் மூன்று கோடி மக்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுற்றுலாத் துறையையே நம்பியிருக்கின்றனர். நாட்டுக்கு முக்கிய வருமானத்தை ஈட்டித் தரும் துறையாக சுற்றுலாத்துறை உள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உள்ளூர் தயாரிப்புக்களுக்கு முன்னுரிமை அளிக்கும் பொருளாதாரத் திட்டத்தை அறிமுகப் படுத்திய நிலையில் வேறுபட்ட அணுகுமுறையுடன் அதிக இலாபத்தைப் பெறுவதற்கான வழிகளைச் சிந்திக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (எ)

# பழைய மாணவர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ். கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலையின் பழைய மாணவர் கலந்துரையாடல் எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அபிவிருத்திச் செயல்பாடுகள் தொடர்பான இந்தக் கலந்துரையாடலில் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.(எ)

# கிழக்கு முனையம் இந்தியாவுக்கு; தீர்மானத்தில் இனி மாற்றமில்லை

## நிமால் லான்ச திட்டவட்டம்



கொழும்பு,ஜன.27

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதற்கு யார் எதிர்ப்பைத் தெரிவித்தாலும் அதனை வழங்கும் தீர்மானத்தில் இனிமேல் எவ்வித மாற்றமும் கிடையாது. 35 வருட காலத்துக்கு வர்த்தக நடவடிக்கைகளுக்காக கிழக்கு முனையத்தை ஒப்பந்த அடிப்படையில் வழங்குவதால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்று வாழ வேண்டிய தேவை அரசாங்கத்தில் உள்ள எவருக்கும் கிடையாது என்பதை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளோம் என கிராம வீதி அபிவிருத்தி, அத்தியாவசிய சேவைகள் தொடர்பான இராஜாங்க அமைச்சர் நிமால் லான்ச தெரிவித்தார்.

கெரவலபிட்டி பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் இளைஞர் அணி செயல்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தேசிய வளங்களை வெளிநாடுகளுக்கு விற்க மாட்டோம் என்பதை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. முதலீடுகளை ஊக்குவிப்பதற்காகவே கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் இந்திய நிறுவனத்துக்கு வியாபார நடவடிக்கைகளுக்காக மாத்திரம் வழங்கப்படுகிறது.

இந்தியா மாத்திரமல்ல சீனா, ஜப்பான், அமெரிக்கா என அனைத்து நாடுகளும் இலங்கையில் முதலீடுகளை முன்னெடுக்க முடியும். அதற்கான சூழல் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாடுகளின் முதலீடுகள் அதிகரிக்கும் போது இளைஞர் - யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்படும்.

ஆகையால் கிழக்கு முனையம் இந்திய நிறுவனத்துக்கு வியாபார நடவடிக்கைகளுக்காக வழங்கப்படும். இந்தியா இலங்கையின் அயல்நாடு என்பதால் அந்நாட்டைப் பகைத்துக் கொள்ள முடியாது.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் இலங்கையின் தேசிய பொருளாதாரம் ஒப்பீட்டளவில் பாதிக்கப்பட்டுள்ளது. நெருக்கடிகளை வெற்றி கொண்டு பொருளாதார மட்டத்தில் முன்னேற்றமடைவதற்கான நடவடிக்கைகளைச் செயல்படுத்த வேண்டும்.

இதன் முதற்கட்டமாகவே விமான நிலையங்கள் தற்போது திறக்கப்பட்டுள்ளன. கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு கதவு திறக்கப்பட்டுள்ளது என எதிர்க்கட்சியினர் விமான நிலைய திறப்பு விடயத்தை சுட்டிக்காட்டி அரசியல் இலாபம் தேடிக் கொள்கின்றனர்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை இந்திய நிறுவனத்துக்கு வழங்குவதால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. முனையத்தின் 51 சதவீதமான உரிமம் துறைமுக அதிகார சபையிடமே உள்ளது. அரசாங்கத்தின் தீர்மானத்தை தற்போது எதிர்க்கும் எதிர்க்கட்சியினர் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவுக்கு வழங்கும் போது அமைதியாக இருந்தவர்கள். தற்போது தேசப்பற்றுள்ளவர்கள் போல பேசுகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் 5 பிரதான மாபெரும் அபிவிருத்திகள் செயல்படுத்தப்பட்டன.

கடந்த அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட காலத்துக்கு சீன நிறுவனத்துக்கு வழங்கியது. இதனால் இலங்கைக்கு பெருமளவான இலாபம் கிடைக்கப் பெறவில்லை.

ஆனால் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் இந்திய நிறுவனத்துக்கு 35 வருட காலத்துக்கு வர்த்தக நடவடிக்கைகளுக்கு மாத்திரம் வழங்கப்படுகிறது. இதனால் பெருமளவில் வருமானம் கிடைக்கப் பெறும். ஆகவே எவர் எதிர்த்தாலும் கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் இந்திய நிறுவனத்துக்கு வழங்கப்படும் என்பதில் எவ்வித மாற்றமும் மில்லை- என்றார். (எ)

# விவசாயிகள் போராட்டம் வன்முறையாக வெடித்தது!

## செங்கோட்டையில் விவசாயிகளின் கொடி



புதுடில்லி, ஜன. 27

இந்தியாவில் புதிதாக அறிமுகமான வேளாண் சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் தொடர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்நிலையில் இந்திய குடியரசு தினமான நேற்று விவசாயிகள் டிராக்டர் பேரணியை நடத்தினர்.

3 இலட்சம் டிராக்டர்கள் அணிவகுத்த இந்தப் போராட்டத்தில் பொலிஸாருக்கும் அவர்களில் ஒரு பகுதியினருக்கும் இடையே கடும் மோதல் ஏற்பட்டது. இதன்போது விவசாயிகளை தடியால் அடித்தும், கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் கலைத்தனர்.

டிராக்டர் பேரணியை விவசாயிகள் நடத்த பொலிஸார் அனுமதியளித்தனர். ஆனால், மத்திய டில்லிக்குள் வராமல் புறநகர் பாதையிலேயே பேரணி செல்ல வேண்டும் என்று கூறப்பட்டது. அத்துடன் மதியம் 12 மணிக்குப் பின்னரே பேரணியை நடத்தவும் அனுமதி வழங்கப்பட்டது.

எனினும், நேற்று காலை முதல் திக்ரி, காஜிப்பூர், சிங்கு எல்லையில் இருந்து ஆயிரக்கணக்கான டிராக்டர்களில் விவசாயிகள் பேரணியாக டெல்லி நோக்கி வரத் தொடங்கினர். திக்ரி எல்லையில் பொலிஸாரின் தடையை மீறி விவசாயிகள் செல்ல முற்பட்டபோது ஏற்பட்ட முரண்பாடு வன்முறையாக வெடித்தது.

எனினும், விவசாயிகளில் ஏராளமானோர் டில்லி நகருக்குள் நுழைந்தனர். அங்கும் பொலிஸாரின் தடைகளை தகர்த்து அவர்கள் நுழைய முயன்றனர். இதன்போதும் வன்முறைகள் வெடித்தன. அவர்களை கலைக்க அவர்கள் மீது தடி அடி நடத்தியதுடன், கண்ணீர் புகைக் குண்டுகளையும் பொலிஸார் வீசினர்.

பொலிஸாரின் நடவடிக்கைக்கு எதிராக விவசாயிகளும் வன்முறையில் இறங்கினர். இதனிடையே செங்கோட்டைக்குள் நுழைந்த விவசாயிகளில் ஒரு பகுதியினர் நுழைந்தனர். அவர்கள் செங்கோட்டையின் உச்சிக் கோபுரம் ஒன்றில் விவசாயிகளின் கொடியை ஏற்றினர். இந்திய சுதந்திர தினத்தன்று இந்திப் பிரதமர் கொடியேற்றும் இடத்திலும் விவசாயக் கொடி ஏற்றப்பட்டது. இதையடுத்து அப்பகுதி எங்கும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (ஐ)



# நாய், பூனைகளுக்கும் விரைவில் தடுப்பு மருந்து அவசியமாகலாம்!

## அறிவியலாளர்கள் எச்சரிக்கை

வைரஸ் பரவலை முழுமையாகக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் மனிதர்களோடு நெருக்கமாக வாழும் விலங்குகளுக்கு-குறிப்பாக நாய், பூனை போன்ற வளர்ப்பு பிராணிகளுக்கு-வைரஸ் தடுப்பு மருந்துகளை இப்பொழுதே தயார் செய்தாக வேண்டும் - தொற்று நோய் அறிவியலாளர் குழு ஒன்று இவ்வாறான முன்னெச்சரிக்கை வெளியிட்டிருக்கிறது.

மனிதர்களுக்காக தயாரிக்கப்படுகின்ற தடுப்பு மருந்துகள் மட்டும் கொரோனா வைரஸை முற்றாக ஒழித்துவிடாது என்றும் மாற்றமடைந்து உருமாறக்கூடிய வைரஸ் கிருமிகள் வீட்டு மிருகங்கள், பண்ணை விலங்குகள் போன்றவற்றுக்குத் தொற்றி மீண்டும் உலகில் பரவுவதற்கான சாத்தியங்கள் உண்டு என்றும் அந்த அறிவியலாளர் குழு எச்சரித்துள்ளது.

தொற்றுக்கள் மற்றும் நுண் உயிரியல் தொடர்பான மருத்துவத் தகவல்களுக்கான, ஜேர்னல் விருலென்ஸ்' சஞ்சிகையில் இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது.

இதுவரை எந்த நாட்டிலும் நாய், பூனைகளுக்கு தொற்றிருப்பது நிரூபிக்கப்படவில்லை. ஆனால், தன்னைத் தக்கவைத்துக் கொள்வதற்காக புதுப்புது வடிவங்களை எடுக்கின்ற வைரஸ் காலப்போக்கில் வீட்டு விலங்குகளில் தொற்றாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது என ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

முன்னெச்சரிக்கையாக ரஷ்யா வளர்ப்புப் பிராணிகளுக்கான வைரஸ் தடுப்பூசி ஒன்றைத் தயாரிக்கும் பணிகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

"கொவிட்- 19" வைரஸ் முதலில் வௌவால்களில் இருந்து வந்திருப்பினும் அதனை மனிதர்களுக்குப் பரப்பிய இடைநிலை விலங்கு பங்கோலின்களே என்று முதலில் நம்பப்பட்டது. ஆனால், அதனை நிரூபிக்கும் எந்த ஆதாரமும் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

சீனாவில் வௌவால்களுக்கும் மனிதர்களுக்கும் இடையே வைரஸ் முதலில் தொற்றுவதற்கு மிங் விலங்குகள் காரணமாக இருந்திருக்கலாம் என்று இப்போது புதிய ஆய்வுகள் சொல்கின்றன. (ஐ)

# சுரங்க விபத்து: உடல்கள் மீட்பு

பீஜிங், ஜன. 27

சீனாவில் தங்க சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் உயிரிழந்த பத்து தொழிலாளர்களின் சடலங்களை மீட்பு படையினர் மீட்டுள்ளனர்.

சீனாவின் கடலோர சாண்டோங் மாகாணத்தில் தங்கம் உற்பத்தி செய்யும் முக்கிய பிராந்தியமான கிக்ஸியாவில் உள்ள ஹூஷான் சுரங்கத்தில் கடந்த 10ஆம் திகதி இந்த வெடி விபத்து ஏற்பட்டது.

இதனால் சுமார் 600 மீற்றர் (2,000 அடி) ஆழத்தில் பணிபுரியும் மொத்தம் 22 சுரங்கத் தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர். இந் நிலையில் அவர்களுள் 10 பேர் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டனர் என்று சாண்டோங் மாகாணத்தில் உள்ள யந்தாய் நகர மேயர் சென் ஃபெய் திங்களன்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இதேவேளை விபத்தில் சிக்குண்ட மேலும் 11 தொழிலாளர்கள் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில் மேலும் ஒருவர் சுரங்கத்தினுள் காணமல் போயுள்ளார். அவரை கண்டுபிடித்து மீட்பதற்கான நடவடிக்கையும் மும்முரமாக இடம்பெற்று வருகின்றது.

மிகவும் மோசமான சுரங்க விபத்துக்கள் ஏற்படும் நாடுகளில் சீனாவும் ஒன்று. கடந்த ஆண்டு மாத்திரம் அங்கு ஏற்பட்ட சுரங்க விபத்துக்களில் மொத்தம் 573 உயிரிழப்புகள் பதிவாகின என்று தேசிய சுரங்க பாதுகாப்பு நிர்வாகம் தெரிவித்துள்ளது.



இரவு ஊரடங்கை எதிர்த்து

# நெதர்லாந்து நகரங்களில் வன்செயல்கள் வெடிப்பு!

அம்ஸ்ரடாம், ஜன. 27

கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளை எதிர்த்து நெதர்லாந்தில் வன்செயல்கள் வெடித்துள்ளன. பல நகரங்களில் இளைஞர்களுக்கும் கலகம் அடக்கும் படையினருக்கும் இடையே மூன்றாவது நாளாக திங்கள் இரவும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இந்த வன்முறைகளில், கார்கள், சைக்கிள்கள் தீக்கிரையாகின. கடைகள் சூறையாடப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதிய வைரஸ் பரவலை அடுத்து மக்கள் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கில் நெதர்லாந்து அரசாங்கம் இரவு 9 மணி முதல் அதிகாலை 4.30 மணி வரை ஊரடங்குக் கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்தி உள்ளது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சிறிய அளவில் தொடங்கிய ஆர்ப்பாட்டங்களே பெரும் வன்முறையாக மாறி உள்ளன.

துறைமுக நகரமான ரொட்டடாமில் ஞாயிறன்று நடந்த ஆர்ப்பாட்டங்களின்போது இளைஞர் குழுக்கள் பொலிஸார் மீது பட்டாசுகளையும் கற்களையும் வீசித் தாக்கினர். கடைகள், வாகனங்களையும் சேதப்படுத்தினர் என்று கூறப்படுகிறது.

நிலைமை கட்டுமீறியதால் நகர நிர்வாகம் கலகம் அடக்கும் பொலிஸாரை வரவழைத்தது. இதையடுத்துப் புதிதாக மோதல்கள் வெடித்தன. ஆர்ப்பாட்டங்கள் வன்முறைகளாக மாறிப் பல இடங்களுக்கும் பரவி உள்ளன.

படையினர் தண்ணீர் பீரங்கிகள், கண்ணீர்ப் புகை கொண்டு கலகக்காரர் களைக்கட்டுப்படுத்தி வருகின்றனர். தலைநகர் அம்ஸ்ரடாம் உட்பட அல்பென், த கஹ்யூ, டென் போஸச், ஆமர்ஸ்பூர்ட், ஹெல்மன்ட் ஆகிய நகரங்களிலும் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அம்ஸ்ரடாமில் நாய்கள், குதிரைகள் சகிதம் கலகம் அடக்கும் பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை விரட்டினர். நெதர்லாந்தின் இடைக்கால அரசின் பிரதமரான மார்க் ருட் இந்த வன்முறைகளைக் கொடூரமான குற்றச் செயல்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

கொரோனா வைரஸ் நெருக்கடி ஆரம்பித்த பின்னர் இரவு ஊரடங்கு உட்பட கண்டிப்பான சுகாதாரக் கட்டுப்பாடுகளை அந்நாட்டு அரசு இப்போது தான் முதல் முறையாக அமுல் செய்துள்ளது. இரவு ஊரடங்கு விதிகளை மீறுவோர் 95 யூரோக்கள் அபராதம் செலுத்த நேரிடும்.

நெதர்லாந்தின் இதுவரை 9 இலட்சத்து 62 ஆயிரம் தொற்றுக்கள் உறுதி செய்யப்பட்டுள்ளன. 13 ஆயிரத்து 646 மரணங்கள் பதிவாகி உள்ளன. (ஐ)

# அதிகரிக்கும் இயற்கை பேரழிவுகள்: 20 ஆண்டில் 48 இலட்சம் பேர் பலி!

பெர்லின், ஜன. 27

பருவநிலை மாற்றங்களால் ஏற்பட்ட இயற்கைப் பேரழிவுகளால் கடந்த 20 ஆண்டுகளில் உலகளாவிய ரீதியில் சுமார் 48 இலட்சம் பேர் உயிரிழந்தனர் என்று ஜேர்மன்வோட்ச் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

கொவிட் -19 தொற்று நோய் நெருக்கடியால் இந்த ஆண்டு இணைய வழித் தொடர்பாடல் முறையில் நடந்த பருவநிலை மாற்ற உச்சிமாநாட்டின் தொடக்கத்தில் ஜெர்மன்வோட்ச் என்ற கருத்தாய்வு அமைப்பு இதனைத் தெரிவித்துள்ளது.

புயல்கள், வெள்ளம் மற்றும் வெப்ப அலைகள் போன்றவற்றால் கிட்டத்தட்ட அரை மில்லியன் மக்கள் இறந்துள்ளனர். இயற்கைப் பேரழிவுகள் மற்றும் அதனால் உயிரிழப்புக்கள் அதிகரிப்பில், வளரும் நாடுகளின் பங்கு பெருமளவில் உள்ளன எனவும் ஜேர்மன்வாட்ச் தெரிவித்துள்ளது.

இந்த இயற்கைப் பேரழிவுகளால் உலகப் பொருளாதாரத்திற்கு இந்த நூற்றாண்டில் 2 இலட்சத்து 56 ஆயிரம் கோடி டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டிலிருந்து பதிவான கிட்டத்தட்ட 11,000க்கும் மேற்பட்ட தீவிர இயற்கை அனர்த்தங்களால் 4 இலட்சத்து 80 ஆயிரம் பேர் இறந்தனர். ஏழை நாடுகளில் வெப்ப நிலை உயர்வைக் குறைக்கவும், மாறிவரும் பருவநிலை மாற்றத்துக்கு ஏற்ப தங்களை தயார் செய்துகொள்ளவும் ஏதுவாக, பணக்கார நாடுகள் ஒவ்வொரு ஆண்டும் ஒரு இலட்சம் கோடி டொலர்களை வழங்க வேண்டும் என 2015 பாரிஸ் பருவ நிலை ஒப்பந்தத்தின் கீழ் முடிவு செய்யப்பட்டது. ஆனால், இந்த நிதி மிகவும் குறைவானது என்று சமீபத்திய ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. (ஐ)

# 107 வருடங்களின் பின் இங்கிலாந்து சாதனை!

## தாயகத்தில் இலங்கை பரிதாபம்

காலி, ஜன. 27

107 வருடங்களின் பின்னர் இங்கிலாந்து அணி வெளிநாட்டு மண்ணில் தொடர்ச்சியாக 5 டெஸ்ட் வெற்றிகளைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

நேற்றுமுன்தினம் காலி சர்வதேச மைதானத்தில் இடம்பெற்ற தொடரின் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியின் நான்காம் நாள் ஆட்டத்துடன் இலங்கை அணியை 6 விக்கெட்களினால் தோற்கடித்தது. இதன் மூலம் இங்கிலாந்து அணி 2-0 என்ற கணக்கில் தொடரை கைப்பற்றியது.

நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டத்தின் போது இங்கிலாந்து அணிக்கு 164 ஓட்டங்களை வெற்றியிலக்காக இலங்கை அணி நிர்ணயித்திருந்தது.

இதன்படி, ஆடிய இங்கிலாந்து அணி 43.3 ஓவர்களில் 4 விக்கெட்களை மட்டும் இழந்து 164 ஓட்டங்களை பெற்று வெற்றியை தம்வசப்படுத்திக் கொண்டது.



துடுப்பாட்டத்தில் டொம் சிப்லி ஆட்டமிழக்காது 56 ஓட்டங்களையும் ஜோஸ் பட்லர் ஆட்டமிழக்காது 46 ஓட்டங்களையும்பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பில் லசித் எம்புல்தெனிய 73 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை வீழ்த்தினார்.

இலங்கை மண்ணில் வைத்து இலங்கை அணிக்கு எதிராக தொடர்ச்சியாக 6 ஆவது முறையாக இங்கிலாந்து அணி பெற்றுக் கொண்ட வெற்றி இதுவாகும்.

இதேவேளை, 107 வருடங்கள் கழித்து வெளிநாடுகளில் தொடர்ச்சியாக 5 டெஸ்ட் போட்டிகளை வென்று சாதனை படைத்துள்ளது இங்கிலாந்து அணி. 1911 முதல் 1914 வரை இங்கிலாந்து அணி வெளிநாடுகளில் தொடர்ச்சியாக 7 டெஸ்ட்களை வென்றது. தென்னாபிரிக்காவில் 3 டெஸ்ட்களிலும் அவுஸ்திரேலியாவில் 4 டெஸ்ட்களிலும் வென்றது. கடந்த வருடம் தென்னாபிரிக்காவில் விளையாடிய மூன்று டெஸ்ட்களையும் வென்ற இங்கிலாந்து அணி தற்போது இலங்கையில் விளையாடிய 2 டெஸ்ட்களிலும் வெற்றி கண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



## பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட்: 220இற்கு சுருண்டது தென்னாபிரிக்கா

கராச்சி, ஜன. 27

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 220 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

பாகிஸ்தானுக்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் சென்றுள்ள தென்னாபிரிக்கா அணிக்கு எதிரான டெஸ்ட் தொடர் ஆரம்பமாகியுள்ளது.

கராச்சியில் நேற்று ஆரம்பமான முதல் போட்டியில், நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இந்தப் போட்டியில் பாகிஸ்தான் அணியில் இம்ரான் பட், நயுமன் அலி ஆகியோர் அறிமுகமாகினர்.

துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு டீன் எல்கர், மக்ரம் ஆகியோர் தொடக்கம் கொடுத்தனர். எல்கர் நிலைத்து ஆட மறுமுனையில், விக்கெட்கள் சீரான இடைவெளியில் விழுந்தன.

மக்ரம் 13, வான் டெர் டுசென் 17, டூ பிளசிஸ் 23, டி கொக் 15 என் ஆட்டமிழந்தனர். இந்நிலையில் அரைச்சதம் கடந்து அசத்திய எல்கரும் 58 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்னர் வந்தவர்களில், ஜோர்ஜ் லிண்ட் மட்டும் அதிகபட்சமாக 35 ஓட்டங்களைக் குவித்தார்.

69.2 ஓவர்களில் தென்னாபிரிக்க அணி அதிகபட்சமாக 220 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.பாகிஸ்தானின் பந்து வீச்சில் யசீர் ஷா 3 விக்கெட்களையும், நயுமன் அல், ஷா அபிரிடி ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

# சச்சின் சாதனைகளை ஜோ ரூட் தகர்ப்பார்

## போய்காட் நம்பிக்கை

லண்டன், ஜன. 27

டெஸ்ட் போட்டிகளில் சச்சின் டெண்டுல்கர் படைத்துள்ள சாதனைகளை முறியடிக்கும் திறமையும், சக்தியும் இங்கிலாந்து வீரர் ஜோ ரூட்டுக்கு இருக்கிறது என்று கிரிக்கெட் ஜாம்பவானும், வர்ணனையாளருமான ஜெப்ரி போய்காட் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.




இங்கிலாந்து அணியின் டெஸ்ட் போட்டி கப்டன் ஜோ ரூட், இலங்கைக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட தொடரில் 2 சதங்கள் உள்பட 426 ஓட்டங்களை குவித்தார். அதிகபட்சமாக 228 ஓட்டங்களை சேர்த்த ரூட், இலங்கையுடனான டெஸ்ட் தொடரை 2-0 என இங்கிலாந்து அணி கைப்பற்ற முக்கிய காரணமாக அமைந்தார்.

இந்நிலையில், ஜெப்ரி போய்காட் எழுதிய கட்டுரையில்,

'இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர்கள் டேவிட் கோவர், கெவின் பீற்றர்ஸனை விட ஜோ ரூட் அதிக ஓட்டங்கள் அடிப்பார் என்பதையெல்லாம் மறந்துவிடுங்கள். ஜோ ரூட்டால் 200 டெஸ்ட் போட்டிகள் வரை விளையாட முடியும். சச்சின் டெண்டுல்கர் சேர்த்த ஓட்டங்களை விட அதிகம் குவிக்க முடியும்.

தற்போது ரூட்டுக்கு 30 வயதுதான் ஆகிறது. 99 டெஸ்ட் போட்டிகள் விளையாடியுள்ளார். 8,249 ஓட்டங்கள் குவித்துள்ளார். நீண்ட காலத்தில் ஜோ ரூட் பெரிதாக ஏதும் காயத்தால் அவதிப்படாத நிலையில், நிச்சயம் சச்சின் டெண்டுல்கர் வைத்துள்ள பல சாதனைகளையும், 15,921 ஓட்டங்களையும் முறியடிப்பார் என நம்புகிறேன். ஆனால், ஜோ ரூட்டை எந்த வீரருடனும் ஒப்பிட்டுப் பேச விரும்பவில்லை - என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# சுழல்பந்தை புஜரா தூக்கி அடித்தால் பாதி மீசையுடன் விளையாடுவேன்

## அஸ்வின் சவால்

சென்னை, ஜன. 27

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மொயின் அலி வீசும் பந்தை, புஜாரா தூக்கியடித்து விளையாடினால் பாதி மீசையுடன் மைதானத்துக்கு வருகிறேன் என்று இந்திய சுழல்பந்து வீச்சாளர் அஸ்வின் சவால் விடுத்துள்ளார்.

இங்கிலாந்து - இந்திய அணிகள்இடையே பெப் 05ஆம் திகதி தொடங்கவுள்ளது. இந்நிலையில், இந்திய அணியின் துடுப்பாட்ட பயிற்சியாளர் விக்ரம் ராத்தோரை பேட்டியெடுத்து தனது யூ-ரியூப் சனலில் வெளியிட்டுள்ளார் சுழல்பந்து வீச்சாளர் அஸ்வின்.

இதன்போது, புஜாராவின் துடுப்பாட்டம் குறித்துப் பேசப்பட்டது. (புஜாராவை விக்ரம் பாராட்டிப் பேச அதை கிண்டல் செய்யும் விதமாக அஸ்வினின் கேள்விகள் அமைந்துள்ளன)

அஸ்வின்: நான் எப்போது புஜாராவுக்குப் பந்துவீசினாலும் அல்லது எதிராக விளையாடினாலும் என்னிடம் அவர் ஆட்டமிழந்துள்ளார். இதை நீங்கள் எங்கு வேண்டுமானாலும் சரி பார்க்கலாம்.

நீங்கள் அவரை எவ்வளவு காப்பாற்றினாலும் இதுதான் உண்மை. நான் ஒன்று கேட்கிறேன். சுழல் பந்துவீச்சை புஜாரா தூக்கியடிக்க வாய்ப்பு உண்டா? அதை நாங்கள் எப்போதாவது பார்க்க முடியுமா?

விக்ரம்: அதற்கான வேலைகள் நடக்கின்றன. ஒருமுறையாவது சுழல்பந்துவீச்சாளரின் பந்தைத் தூக்கியடித்து விளையாட வேண்டும் என நான் அவரை மாற்ற முயற்சி செய்கிறேன். ஆனால், அவர் இதை இன்னும் ஏற்கவில்லை. ஒவ்வொரு முறையும் அபாரமான காரணங்களைக் கூறுகிறார்.



அஸ்வின்: ஒருவேளை இந்த இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் கிரீஸை விட்டு மேலே ஏறி வந்து மொயின் அலி அல்லது வேறு ஏதாவது சுழல்பந்து வீச்சாளரின் பந்தை புஜாரா தூக்கியடித்தால் நான் என்னுடைய மீசையில் பாதியை எடுத்துவிட்டு வந்து மைதானத்தில் விளையாடுகிறேன். இது வெளிப்படையான சவால்.

விக்ரம்: இது அருமையான சவால். இதை அவர் ஏற்பார் என நினைக்கிறேன். இது தொடர்பாக அவருடன் அருமையான உரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது. எல்லோரும் முன்னால் வந்து நின்று களத்தடுப்பு செய்யும்போது நீங்கள் ஏன் பந்தைத் தூக்கியடிக்கக் கூடாது? ஒரே ஒரு ஷொட் மட்டுமே. இதனால் களத்தடுப்பாளர் பின்னால் நகர்த்தப்படுவார். இதனால், நீங்கள் ஓர் ஓட்டத்தை சுலபமாக எடுக்கலாம் என்றேன். இதற்கு அவரிடம் அருமையான காரணம் உள்ளது. அவர் என்னிடம் சொன்னார், நான் அப்படிச் செய்து களத்தடுப்பாளரை பின்னால் தள்ளினால், எனக்கு ஓர் ஓட்டம்தான் கிடைக்கும். ஆனால், இப்போது களத்தடுப்பாளரகள் முன்னால் நிற்கும்போது வீரர்களின் இடைவெளியில் ஷொட் அடித்து 2 அல்லது 3 ஓட்டங்களைஎடுப்பேன். எனவே எது சிறந்தது எனக் கேட்பார்.

அஸ்வின்: இப்போது வேடிக்கையாகப் பேசியதைத் தவிர்த்துப் பார்த்தால் நானும் புஜாராவும் சிறந்த நண்பர்கள். புஜாராவின் எதிரி என என்னை எண்ணி விடாதீர்கள். அவரை வம்புக்கு இழுப்பது எனக்குப் பிடித்தமானது.





இந்தியாவின் 72 ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரக அலுவலகத்தில் நேற்றுக் காலை விசேட நிகழ்வுகள் இடம்பெற்றன. யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ச.பாலச்சந்திரன், இந்திய தேசிய கொடியை ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து குடியரசு தின நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் தூதரக அதிகாரிகள், அரசியல் பிரதிநிதிகள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# சட்டத்தின் உதவியை நாடும் மக்களின் இல்லமாக நீதிமன்றம் மாற வேண்டும்

## பிரதமர் மஹிந்த விருப்பம்



கொழும்பு,ஜன.27

சட்டத்தின் உதவியை நாடும் மக்களின் இல்லமாக நீதிமன்றம் மாற வேண்டும் என்பதே எனது விரும்பம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

“ஒரு நாடு - ஒரு சட்டம்” தேசிய நலனைக் கட்டியெழுப்புவதில் அரசாங்கம் முன்னணியில் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நீதிமன்ற கட்டடத் தொகுதிக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் கலந்துகொண்ட அவர், சட்ட தாமதங்களைத் தவிர்ப்பதற்கும், பிரச்னைகளை திறம்பட தீர்ப்பதற்கும் அணுகுமுறையில் மாற்றம் வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

மேலும் வரலாற்றில் ஒவ்வொரு முறையும் ஆட்சிக்கு வந்தபோதும் நீதித்துறையின் சுதந்திரத்தைப் பாதுகாக்க பணியாற்றியதாகவும் தனிப்பட்ட குறுக்கீடு மூலம் ஒருபோதும் சட்டத்தை வளைக்க முயற்சிக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

நாட்டு மக்கள் இன்னும் காலாவதியான சட்டங்கள், நடைமுறைகள் மற்றும் கட்டளைகளால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த அழுத்தத்திலிருந்து மக்களை விடுவிப்பது அரசாங்கத்தின் பொறுப்பு.

மேலும், வழக்கு விசாரணைகளின் தாமதம் மக்களுக்குப் பெரும் சுமையாக மாறியுள்ளது. தீர்ப்பு கிடைப்பதற்கு முன்னதாகவே வழக்குத் தாக்கல் செய்தவர் இறக்கும் சந்தர்ப்பங்கள் உள்ளன.

சட்டம் அனைவருக்கும் சமமாக இருக்க வேண்டும். பிரஜைகள் சட்டத்தை மதிக்க வேண்டும் என்பதையே எப்போதும் விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார். (எ)

# இராணுவ பிடியிலிருந்து தமிழர்கள் மீளவில்லை

## சாள்ஸ் நிர்மலநாதன் ஆதங்கம்



வவுனியா,ஜன.27

**1958 ஆண்டுகளில் ஆரம்பித்த தமிழ் மக்கள் மீதான இன அழிப்பு அடக்குமுறை 2009ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டதிலிருந்து இன்று வரை வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் இராணுவப்பிடிக்குள் அடிமைகளாகவே வாழ்ந்து வருகின்றனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை அரசாங்கத்துக்கு கொடுக்கப்படும் அழுத்தங்களானது இலங்கை வாழ் தமிழ் மக்கள் மீது அரசாங்கமும், இராணுவமும் எந்தவொரு அடக்குமுறைகளையும் பிரயோகிக்காத வண்ணம் இருக்க வேண்டும்.

அத்தோடு போர்க்குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க குழு நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு எந்த விதமான தகுதிகளும் இல்லை. கோட்டாபய ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளராக இருந்த போது தான் போர்க்குற்றங்கள் நிகழ்த்தப்பட்டன. போர்க்குற்றம் புரிந்தவர்களே போர்க்குற்றத்தை விசாரிப்பதற்கு குழு நியமிப்பது ஒரு கேலிக்கூத்தான விடயம்.

தொடர்ந்து தமிழ் மக்களை இராணுவப்பிடிக்குள் வைத்து தமிழர்களின் நில அபகரிப்பு மத அடையாளங்கள் அழிப்பு கலாசார அழிப்புக்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அத்தோடு போர்க்குற்றங்களில் ஈடுபட்ட இராணுவ வீரர்களுக்கு உயர் பதவிகளும் அமைச்சின் செயலாளர்களாகவும் வெளிநாட்டுத் தூதுவர்களாகவும் நியமிக்கப்பட்டு வருவதானது, அரசாங்கமே போர்க்குற்றங்களை செய்துள்ளது வெளிப்படையாகத் தெரிகின்றது.

கொரோனா மற்றும் ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் இவற்றை காரணம் காட்டி இராணுவச் சோதனைச் சாவடிகள் அதிகரிக்கப்பட்டு வடக்கு - கிழக்கு இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் தள்ளப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டு இறுதி யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கான நீதி கிடைக்க வேண்டும். - என்றார். (எ)

# கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு இராணுவ அதிகாரிகள் நியமனம்

## எதிர்க்கட்சி எச்சரிக்கை



கொழும்பு,ஜன.27

எதிர்காலத்தில் இராணுவ அதிகாரிகள் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும், அமைச்சின் செயலாளர்களாகவும் நியமிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன. யாரும் உணராமல் நாடு வேகமாக இராணுவமயமாக்கலை நோக்கிச் செல்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரல தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இதேவேளை, உள்துறை அமைச்சு நேரடியாக பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ளமையை சுட்டிக்காட்டினார்.

அத்தோடு கிராம உத்தியோகத்தர் முதல் மாவட்ட செயலாளர்கள் வரையிலான அரச அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சின் கீழ் வருவது இதுவே முதல் முறை என்றும் 25 மாவட்டங்களுக்கும் பாதுகாப்பை மேற்பார்வையிட இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளமையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் எதிர்காலத்தில் இராணுவ அதிகாரிகள் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கும் அமைச்சின் செயலாளர்களாகவும் நியமிக்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன .இதேவேளை கொரோனா தொற்றால் 11 இலட்சத்துக்கும் அதிகமான நோயாளிகளும் 20 ஆயிரம் உயிரிழப்பும் ஏற்பட்டுள்ள உக்ரைனிலிருந்து சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் அனுமதிப்பது தொடர்பில் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர்களுக்கு அனுமதி வழங்குவதற்கு முன்னர் நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

நிதிப் பற்றாக்குறையால் சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. இந்த நடவடிக்கையால் தங்கள் சொந்த பாரம்பரிய இடங்களை பார்வையிட நாட்டு மக்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது- என்றார். (எ)



# தமிழர்களின் கால்நடைகள்கூட வாழமுடியாத நிலையில் நாடு!

## அரசை சாடுகிறார் கலையரசன் எம்.பி.

அக்கரைப்பற்று, ஜன. 27

**நாட்டில் தமிழர்கள் மட்டுமல்ல அவர்களுக்கு சொந்தமான கால்நடைகள்கூட வாழ முடியாத நிலையை அரசாங்கம் உருவாக்கியுள்ளது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராஜா கலையரசன் தெரிவித்தார்.**

**அம்பாறை திருக்கோவில் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவு வழங்கும் நிகழ்வில் பங்கேற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.**

மேலும், அரசாங்கத்தின் நிலைப்பாட்டை பாரக்கும்போது தமிழ் மக்கள் இந்த நாட்டில் வாழலாமா என்ற ஐயப்பாடு எழுகின்றது. ஏனெனில் உலக நாடுகள் அனைத்தும் உலகம் பூராகவும் தீவிரமடைந்து வரும் கொரோனா நோயை எவ்வாறு ஒழிக்கலாம் என்று அல்லும் பகலுமாக உழைத்து கொண்டிருக்கும் இக் காலகட்டத்தில் இலங்கை அரசு மாத்திரம் வட - கிழக்கு பிரதேசங்களில் எவ்வாறு தமிழர்களை அடக்க முடியும். தமிழர்களுடைய நிலங்களை எவ்வாறு ஆக்கிரமிக்க முடியும் என்றே செயல்படுகின்றது.

இந்த செயல்பாடுகள் நாட்டில் ஆரோக்கியமான சூழலை உருவாக்குவதற்கான விடயமாக இல்லை. மாறாக தமிழர்களின் நிலங்களை எவ்வாறு கையகப்படுத்தலாம், தமிழர்களை அவர்களது பூர்வீக இல்லங்களில் இருந்து வெளி யேற்றலாம் என்ற திட்டத்தை அர சாங்கம் முன்னெடுத்து வருகின்றது. இவை நிறுத்தப்பட வேண்டும்.

இன்று நேற்றல்ல அறுபது வருடங்களுக்கு மேலாக இந்த நாட்டில் சொல்ல முடியாத விடயங்களை தொடர்ச்சியாக அனுபவித்த தமிழர்களின் வாழ்விடங்களை அகற்றுவதற்கும், ஆலயங்களை கையகப்படுத்துவதற்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

இன்று மனிதர்கள் மாத்திரமல்ல கால்நடைகள் கூட இலங்கையில் வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக மயிலத்தமடு மேய்ச்சல் தரையில் மேய்ச்சலுக்காக விடப்பட்ட கால்நடைகள் கூட ஈவிரக்கமற்ற முறையில் அண்மை காலமாக கொல்லப்படுகின்றது. இவ்வாறு ஈவிரக்கமற்ற முறையில் அராஜக அரசு செயற்படுகின்றது.

தற்போது அரசியல் ரீதியாக பின்னடைவை சந்தித்து வரும் இந்த அரசு சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களுக்கு இவ்வாறான நிலை எமது அரசினால் மேற்கொள்ளப்படுகின்றது என்ற விடயங்களை சொல்லி பெரும்பான்மை சமூகத்தின் மத்தியில் தமக்கான ஆதரவைப் பெருக்கி கொள்ள முனைகின்றதா என்ற கேள்வி எமக்கு எழுகின்றது- என்றார்.

# வலி. மேற்கு பிரதேச சபை அமர்வு இரு உறுப்பினர்கள் வெளிநடப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 27

வலி.மேற்கு பிரதேச சபையின் அமர்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றபோது சபையின் செயல்பாடுகளில் அதிருப்தி தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். தே.ரஜீவன், சி.இதயகுமாரன் ஆகியோரே வெளிநடப்பு செய்தனர்.

சபையின் 35 ஆவது அமர்வு நேற்று திங்கட்கிழமை உப தவிசாளர் வே.சச்சிதானந்தன் தலைமையில் நடைபெற்றது. தவிசாளரும் வழமையாக அமர்வில் பங்கேற்கும் சபையின் செயலாளரும் சுகயீனம் காரணமாக அமர்விற்கு வருகை தந்திருக்கவில்லை.

அமர்வின் முதல் செயல்பாடான கடந்த அமர்வின் அறிக்கை தொடர்பான விவாதத்தின்போது, அமர்வில் கலந்துரையாடப்படும் விடயங்கள் உரிய வகையில் அறிக்கையிடப்படுவதில்லை என உறுப்பினர் ரஜீவன் கருத்தை முன்வைத்தார்.

சங்கானை பிரதம தபாலகத்திற்கு உரிய அளவுகளை மீறி வீதிப் பக்கம் முன்னோக்கியதாக மதில் அமைக்கப்படும் விடயம் கடந்த அமர்வில் பல உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டு இரு மணித்தியாலம் வரை விவாதிக்கப்பட்ட போதிலும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும் அது தொடர்பாக ஒரு வசனம் கூட அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை எனவும் ரஜீவன் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பாக உறுப்பினர்களான ந.பொன்ராசா, ச.ஜெயந்தன், து.சுஜிந்தன், க.துளசி ஆகியோரும் காரசாரமான கருத்துக்களை முன்வைத்தனர். அமர்வில் இடம்பெறும் விடயங்கள் அறிக்கையில் சேர்க்கப்படாத விடயம் தொடர்ந்தும் இடம்பெறு கின்றது எனவும் சபை செயற்பாடுகள் தொடர்பாக பேணப்பட வேண்டிய ஆவணமான அறிக்கையில் உள்ளதை உள்ளபடியே சேர்க்கப்படாமை ஆரோக்கியமான செயற்பாடு இல்லை எனவும் பொன்ராசா தெரிவித்தார்.

இதன்போது, குறித்த தபாலக விடயத்தில் சபையின் செயற்பாடு குறித்து அதிருப்தி வெளியிட்ட தே.ரஜீவன் மற்றும் இதயகுமாரன் ஆகியோர் சாதாரண மக்களுக்கு ஒரு சட்டமும் அரச திணைக்களங்களுக்கு இன்னொரு சட்டத்தையும் சபை அமுல்படுத்துகின்றது எனக் குற்றம்சாட்டிவிட்டு சபையை விட்டு வெளிநடப்பு செய்தனர். (ஐ-3)



# கிளாலி றோ.க.த.க. பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுகூடம் திறப்புவிழா!

## வடக்கு ஆளுநர் திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம் - தென்மராட்சி கிளாலி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் விஞ்ஞான ஆய்வுகூட கட்டடத் தொகுதி நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் கலந்து கொண்டு இதனைத் திறந்து வைத்தார்.

இதன் பின்னர் மாணவர்கள் மத்தியில் அவர் கருத்துரைக்கையில்,

கிராமப்புற பாடசாலைகளுக்கான வளப்பற்றாக்குறை, வளப்பங்கீடு என்பதுதான் மாகாண சபையில் தற்போது முதன்மை பெறுகின்றது. அந்த வகையில் கிராமப்புற பிரதேசங்களில் விஞ்ஞானம், கணிதம் மற்றும் ஆங்கில பாடங்களில் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களும் மிகக்குறைவாகவே காணப்படுகின்றனர். இதனால், கிராமப்புற பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை வளப்பகிர்வு செய்வது மிக பெரிய சவாலான விடயமாகவுள்ளது.

இவ்வாறான விடயங்கள் எதிர்காலத்திலும் தொடரக்கூடாது என்ற அடிப்படையில், இளைய சமுதாயத்தின் எதிர்காலத்தின் நன்மைக்காக பல இலட்சம் ரூபா செலவு செய்து இவ் விஞ்ஞான ஆய்வுகூடம் நிர்மாணிக்கப்பட்டு இன்று உங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த விஞ்ஞானஆய்வுகூடமானது மாணவர்களின் சாதனைக்கூடமாக திகழ ஆசிரியர்களின் சரியான வழிகாட்டல் வேண்டும். ஆசிரியர்களின் கற்பித்தலுக்கு அப்பால் மாணவர்களின் சுயமான சிந்தனைகள் தான் விஞ்ஞானம் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வட மாகாண பிரதம செயலாளர், வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வட மாகாண கல்வி பணிப்பாளர், வடமாகாண கல்வி துறைசார் அதிகாரிகள், அதிபர் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் என பல தரப்பினரும் பங்கேற்றிருந்தனர். (ஐ-3)

# லைபீரிய கப்பல் விபத்து: கடல்சார் சுற்றுச்சூழல்

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 27

திருகோணமலைக்கு அண்மித்ததாக சின்ன இராவணா கோட்டை கடற்பரப்பில் விபத்துக்குள்ளான லைபீரிய கப்பல் குறித்து கடல் சார் சுற்றுச்சூழல் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

விபத்துக்குள்ளான கப்பலிலிருந்து இதுவரை கடலுக்கு எண்ணெய்க் கசிவுகள் எதுவும் வரவில்லை என கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் தர்ஷனி லஹந்தபுர தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை நாட்டின் தென்கிழக்கு கடற்பரப்புக்குள் சுமார் 5.5 கடல்மைல் தொலைவில் சின்ன இராவணா கோட்டை கடற்பரப்பில் பெரும் அலைகள் எம்.வி.யூரோசூன் என்ற கப்பல் ஒரு பாறையில் மோதி விபத்துக்குள்ளானது.

அந்தக் கப்பல் தற்போது பாதுகாப்பான இடத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளதுடன் கடலடியில் ஆய்வுகள் நடந்து வருவதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

மேலும், பாறைகள் காரணமாக கப்பலின் அடிப்பகுதியில் சிறு சேதங்கள் ஏற்பட்டுள்ளமை ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன.

இதேவேளை கொழும்பின் கடல் மீட்பு ஒருங்கிணைப்பு நிலையம் கப்பலை பழுது பார்க்குமாறு உள்ளூர் முகவருக்கு அறிவித்துள்ளது.

மேலும், குறித்த கப்பலின் மாலுமி உட்பட பணியாளர்கள் பாதுகாப்பாக இருக்கின்றனர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## கெற்பேலி அரசினர் பாடசாலை:

# வகுப்பறை கட்டட தொகுதியை திறந்து வைத்தார் வடக்கு ஆளுநர்



யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாணம் - தென்மராட்சி கெற்பேலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வகுப்பறை கட்டடத்தொகுதி திறப்பு விழா நேற்று இடம் பெற்றது. வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ பிரதம விருந்தினராகப் பங்கேற்று கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இதன்போது, “யுத்தத்தால் பல்வேறு இன்னல்களை சந்தித்ததுடன் பலரையும் ஆதரித்த பிரதேசமாக காணப்படும் இப்பிரதேசத்தின் மக்களது பிரச்னைகள் மனிதாபிமானத்துடன் நோக்கப்பட வேண்டும்.

இந்த வகுப்பறை தொகுதிக் கட்டடம் சிறப்பான வகையில் அமைக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளது. எனவே, மக்களின் தேவைகள் சரியாக இனங்காணப்பட்டு, இவ் இளைய சமுதாயம் சிறப்பாக சரியான நெறிமுறைகளூடாக வளர்த்தெடுக்கப்பட பெற்றோர்களின் சிறந்த வழிகாட்டல் மிக முக்கியமானது என்றும் அவர் கூறினார். (ஐ -3)

# தவசிகுளத்திற்கு குடிதண்ணீர்: மக்கள் விண்ணப்பிக்க முடியும்!

வவுனியா, ஜன. 27

வவுனியா - தவசிகுளம் மக்கள் குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்று, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் சமூகவியலாளர் ச,கோபிநாத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக தொடர்ந்துரைத்த அவர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் தவசிக்குளம் பகுதியில் நீர் வழங்கல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நீரிணைப்புக் குழாய்களை பொருத்தும் பணியானது தற்போது நிறைவு பெற்றுள்ளதென்றார்.

அதன் தொடர்ச்சியாக, தவசிக்குளம் பகுதியில் வாழும் மக்கள் தங்களுக்கான குடிநீரிணைப்பினைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பின் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வவுனியா பிராந்திய முகாமையாளர் காரியாலயத்தில் அல்லது வவுனியா நிலைய பொறுப்பதிகாரி காரியாலயத்திலும் தங்களுக்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமெனவும், அவர் கூறினார்.

மேலும் எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் நிர்மாணப்பிரிவினாரால் தவசிக்குளம் கிராம சேவகர் பிரிவில் நடத்தப்படஇருக்கின்ற நடமாடும் சேவையினூடாகவும் தங்களுக்கான நீரிணைப்பை பெறுவதற்குரிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்று தமக்குரிய பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும், அவர் தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மட்டக்களப்பு செயலகத்தில் மூடிய அறைக்குள் கூட்டம்!

## பாதுகாப்பு செயலர், இராணுவ தளபதி பங்கேற்பு

மட்டக்களப்பு, ஜன. 27

**பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரட்ண, இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோர் பங்கேற்ற உயர்மட்டக் கூட்டம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று இடம் பெற்றது.**

மூடிய அறைக்குள் நடந்த இந்தக் கூட்டத்தில் ஊடகங்கள் அல்லது வேறு நபர்கள் பங்கேற்க அனுமதிக்கப் படவில்லை. கூட்டம் நடந்த சமயத்தில் மாவட்ட செயலகத்தை சுற்றி பலத்த பாதுகாப்பு ஏற்படுத்தப் பட்டது. அத்துடன் மட்டக்களப்பு நகரமும் முழுவதும் கூட பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் இராணுவத் தளபதியும், விமானப்படைக்குரிய ஹெலிகொப்டர் மூலம் மட்டக்களப்புக்கு வந்திருந்தனர்.



உத்தியோகத்தர்கள் கடும் சோதனைகளுக்கு மத்தியில் மாவட்ட செயலகத்துக்குள் அனுமதிக்கப்பட்டனர்.

செய்தி சேகரிப்புக்குச் சென்ற ஊடகவியலாளர்கள் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை. இந்தக் கூட்டத்தில் உரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை. (ஐ)

# வடமராட்சி விபத்தில் 4 மாணவர்கள் காயம்!

யாழ்ப்பாணம், ஜன. 27

பருத்தித்துறை - மருதங் கேணி வீதியில் நாகர்கோவில் சந்திக்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தில் நான்கு மாணவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். இதில், முச்சக்கரவண்டி பலத்த சேதமடைந்தது.

நேற்று மதியம் இடம்பெற்ற இந்த சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

மருதங்கேணியில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்த முச்சக்கரவண்டி வீதியிலுள்ள பள்ளத்தில் இறங்கியதால் நிலைதடுமாறி அருகிலுள்ள மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

பருத்தித்துறையிலிருந்து வந்த ஹைஏஸ் ரக வாகனத் திற்கு வழிவிடும்போதே இந்த விபத்து ஏற்பட்டது.

இதில், கிளிநொச்சி இந்துக் கல்லூரியை சேர்ந்த 4 மாணவர்கள் சிறு காயங்களுக்கு உள்ளாகினர். (ஐ)

# ஒரு வார காலத்தில் மட்டும் விபத்துக்களில் 30 பேர் பலி

கொழும்பு, ஜன. 27

கடந்த 17 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையான ஒரு வார காலத்தில் நாடளாவிய ரீதியில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் சிக்கி 30 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்துகளில் 90 பேர் படுகாயமடைந்துள்ளனர். மேலும், 189 பேர் சிறியளவில் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பிரதி பொலிஸ் மா அதிபர், சட்டத்தரணி அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

குறித்த வார காலத்தில் 119 பேரின் வாகனங்கள் விபத்துக்குள்ளாகியுள்ளன. கடந்த ஒரு வார காலப்பகுதியில் 427 வீதி விபத்துகள் பதிவாகியுள்ளன.

இதனிடையே, கடந்த நேற்று மட்டும் நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் ஐவர் உயிரிழந்தனர். 40 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

எனவே, அவதானமாக செயற்படுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொதுமக்களை கோரியுள்ளார்.

# விபத்தில் காயமடைந்த வயோதிப பெண் மரணம்

வடமராட்சி, ஜன. 27

விபத்தில் படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த வயோதிபப் பெண் உயிரிழந்தார். உடுப்பிட்டி வீதி தொண்டைமானாறைச் சேர்ந்த அரிய தாஸ் பங்கசராணி எனும் 62 வயது பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார்.

இவர், கடந்த 21 ஆம் திகதி பேருந்தில் இருந்து இறங்கி வீதியைக் கடந்தபோது வீதியால் வந்த வேறொரு வாகனம் மோதியதில் அவர் காயமடைந்தார்.

உடனடியாக ஊறணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட அவர் பின்னர், யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி கடந்த 23ஆம் திகதி உயிரிழந்தார்.

# மஞ்சள், கிருமிநாசினியுடன் மூவர் கைது!



புத்தளம், ஜன. 27

சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட உலர் மஞ்சள் மற்றும் கிளைபோசெட் (Glyphosate) களை நாசினியுடன் புத்தளம் கற்பிட்டி பகுதியில் வைத்து மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட ரோந்து நடவடிக்கையின் போது சந்தேகத்திற்கிடமான டிங்கி படகு சோதனையிடப்பட்டது.

இதன்போது, 1340 கிலோகிராம் உலர் மஞ்சளும் 80 கிலோகிராம் கிளைபோசெட் களை நாசினியும் கைப்பற்றப்பட்டன.

37 சாக்குகளில் உலர் மஞ்சளும் தலா 100 கிராம் நிறையுடைய 800 பக்கெற்களில் கிளைபோசெட்டும் பொதியிடப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் கற்பிட்டி பகுதியை சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன், குறித்த பொருட்களை ஏற்றிச் செல்வதற்காக அப்பகுதிக்கு சென்றிருந்த லொறியொன்றும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

அருந்ததி
இணைய திருமண சேவை

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
|---|---|
| 15892 \|வே\|1975<br>Seperated\|கொழும்பு-06\| இந்து<br>It Engineer\|Sri lanka\|<br>செவ் : 02 \|மகம்(சிம்மம்)\|177செ.மீ | 16042\| செ\|1977<br>Divorced\|கண்டி\| இந்து<br>Nurse\| Sri lanka\| சு.செவ் : 02<br>பூராடம்(தனுசு) \| 168செ.மீ |
| 15883\|மு \|1976<br>Divorced\| மஸ்கெலியா\| இந்து<br>Coordinator \| Qatar\|<br>பூசம்(கடகம்)\|171செ.மீ | 16117\| வே \|1978<br>பருத்தித்துறை\|இந்து \|Sri Lanka\|<br>பூரம்(சிம்மம்)\|161செ.மீ |
| 16000\| வே\|1979<br>வல்வெட்டித்துறை\| இந்து\|Uk\|<br>Business\|பூசம்(கடகம்) \|170செ.மீ | 16135\| வே \|1979<br>நல்லூர்\| இந்து \|செவ் : 02<br>Computer Typist\| Sri lanka\|<br>கார்த்திகை(மேடம்) \|158செ.மீ |
| 15934 \|வே \|1980<br>யாழ்நகரம்\| இந்து \|செவ் : 12<br>Mechanical\|Sri lanka\|<br>சதயம்(கும்பம்)\|171செ.மீ | 15877\| வே\|1981<br>ஏளாலை\|Sri Lanka\|சு.செவ் : 09<br>Insurance Agent \| இந்து<br>மகம் (சிம்மம்)\| 168செ.மீ |
| 15757\| வே \|1981<br>யாழ்நகரம்\| இந்து \| செவ் : 04<br>Mechanical\| UK<br>கேட்டை(விருச்சிகம்)\| 158செ.மீ | 16033\| வே \|1981<br>சாவகச்சேரி\| இந்து \| செவ் : 07<br>Grama Sevaka\|Sri lanka\|<br>பூசம்(கடகம்) \|155செ.மீ |

20, கே.கே.எஸ் வீதி கொக்குவில் யாழ்ப்பாணம்
0777 164 524 www.arunthathee.com

# மரக்கிளை குத்தியதில் டிப்பர் சாரதி மரணம்!

மட்டக்களப்பு, ஜன. 27

மட்டக்களப்பு - வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தும்பங்கேணி பிரதான வீதியில், மரத்துடன் டிப்பர் மோதியபோது மரக்கிளை குத்தி சாரதி உயிரிழந்தார்.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த சம்பவத்தில் பெரியகல்லாறு, வைத்திய சாலை வீதியை சேர்ந்த கே.சிறிக்காந்த் என்பவரே உயிரிழந்தார்.

மணலுடன் டிப்பர் வாகனத்தை சிறிய வீதியில் செலுத்த முயன்றபோதே இந்த விபத்து இடம்பெற்றது.

மரத்தின் கிளை கண்ணாடியை உடைத்துக் கொண்டு சாரதியின் நெஞ்சுப் பகுதியை தாக்கியுள்ளது. இதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். உதவியாளர் சிறுகாயங்களுடன் உயிர்



தப்பினார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.01.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.